Registered as a News Paper in Sri Lanka
பக்கங்கள்: 08
விலை ரூபா: 3-50

ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY ● மக்கள் தினசரி ●

நாதம் 01 பிரமோதூத ஆ வைகாசி மீ 26ஆம் உ சனிக்கிழமை (09 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 15 ஒசை 111

## வவுனியாவில்லொறிகொள்ளை சூட்டிற்கு சாரதி பலி

(வவுனியா)

வவுனியா தெற்கில் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற லொறிகள் கொள்ளையிடப்பட்டதோடு லொறிச்சாரதி ஒருவர் சூட்டுக்குப் பலியானதோடு கிளினர் கத்திக்குத்திற்கும் இலக்காகி படுகாயமும் அடைந்தார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்று முன்தினமிரவு ஒருமணியளவில் வவுனியா ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமிற்கு அரைமைல் தெற்காக உள்ள பூஓயா பாலத்தடியில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது. சாரம் அணிந்த பத்துப் பன்னிரண்டு பேர்கள் வரையில் இக்கொள்ளையை நடத்தினர். இவர்கள் இரண்டு துப்பாக்கிகளும் (சொட்கன்) கத்தி, வாள் போன்ற கூரிய ஆயுதங்களும் வைத்திருந்தனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# வட - கிழக்கு மாகாண அரச அதிபர்கள் மாநாடு

### அரசுக்கெதிராக ஈ.பி.ஆர். எல். எவ், வழக்குத்தொடருமாம்!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தல் நடத்த அரசாங்கம் முயற்சி செய்தால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக ஈ. பி. ஆர். எல். எவ். தெரிவித்துள்ளது. நேற்றுக் கொழும்பில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அம்பாறை மாவட்ட சிங்கள அதிபர்கள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபை அரசாங்க அதிபர்களின் மகாநாடு நேற்று மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு மாகாணசபை பிரதம செயலாளர் எஸ். கணேசநாதன் தலைமை தாங்கினார், அதே வேளை இக் கூட்டத்திற்கு திருக்கோணமலை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிகாரிகள் (சிங்களவர்) சமுகம் கொடுக்கவில்லையென்பதும் குறிப்பிடத் தக்கது.

இம் மகா நாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனருத்தாரன புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும், தற்போதைய சூழ்நிலை பற்றியும் ஆராயப்பட்டது.

அதேவேளை இன்று வடக்கு கிழக்கு மாகாணசபை புனர்வாழ்வு புனரமைப்பு இணைப்புக் குழுக் கூட்டம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கும் மாகாணசபை பிரதம செயலாளர் எஸ். கணேசநாதனே தலைமை தாங்குகின்றார்.

இம் மகாநாட்டில் கலந்து கொள்ள மாகாணசபை அமைச்சர்களின் செயலாளர்கள் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் பணிப்பாளர்கள் உட்பட பல உயர் அதிகாரிகள் மட்டக்களப்பு வந்துள்ளனர். இவர்களுடன் மத்திய அரசின் புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நல அமைச்சின் செயலாளர் சரித ரத்பத்த அமைச்சு நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, சமூக சேவை பணிப்பாளர் எஸ். சிவானந்தன் யூ. எல். டி. பி. பிரதிநிதி ஆகியோரும் வந்துள்ளனர். (37)

## கொழும்பிற்கு மீண்டும் போமலின் தடவிய மீன்கள்

(கொழும்பு)

கொழும்பு மத்திய மீன்சந்தையில் போமலின் தடவப்பட்ட மீன்கள் மறுபடியும் விற்பனைக்கு வந்துள்ளதை கொழும்பு நகரசபை அதிகாரிகள் பரிசோதனையின் மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

அதிகாலையில் வெளியிடங்களிலிருந்து மீன் சந்தைக்கு லொறிகளில் கொண்டுவரப்படும் மீன்களில் சிலவற்றை எடுத்து ஆய்வு கூடத்தில் பரிசோதித்தபோது சுறா மீனில் போமலின் செறிவு அதிக அளவில் காணப்பட்டதாம்.

27 மீன்களை மாதிரிக்கு எடுத்துப் பரிசோதித்தபோது 7 மீன்களில் போமலின் இருக்கக் காணப்பட்டதாக நகர சபை சுகாதார அதிகாரிகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வருமானக் குறைவால் தற்கொலை

(மட்டக்களப்பு)

ரூபா 300 மாத சம்பளம் குடும்பம் நடத்த போதாது. இந்நிலையில் வாழ்க்கையில் விரக்தியடைந்த இளம் குடும்பஸ்தர் வீட்டில் தூக்கு கயிறு மாட்டி தற்கொலை செய்து

## எரிபொருள் நிலையத்தில்

# 6 ஆவது திருத்த நீக்கம்; அஷ்ரப் எதிர்ப்பு!

## தமிழ் எம். பிக்களையும் எதிர்க்க கோருவாராம்

(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்குக் கோரும் பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டால் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அதை எதிர்த்து வாக்களிக்கும். அத்துடன் இத்திருத்த நீக்கப் பிரேரணையை எதிர்த்துவாக்களிப்பதற்கு எதிர்க்கட்சிகளையும், தமிழ் எம். பிக்களையும் முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுக் கொள்ளும்.

இவ்வாறு இலங்கைமுஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்திருக்கிறார்:

ஆறாவது திருத்த நீக்கப் பிரேரணையை எதிர்த்துவாக்களிக்கும்படி தமிழ் எம். பிக்களையும், எதிர்க்கட்சி எம். பிக்களையும் முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுவருகிறதென்றும் மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் முஸ்லிம் காங்கிரஸ்திரட்டுமென்றும் ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

## திருட்டு அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது நேற்று பிள்ளையார் கோவில் உற்சவத்திற்கு அடியார்கள் வந்த பொழுது கொழும்புத்துறையில் உள்ள வீடு ஒன்றில் கதவைஉடைத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து தூதர்-பாலா சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்துத்தூதர் நோர்மன் வுறுறெர் நேற்று யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி பாலசிங்கத்தைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினார்.

## உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

1986ஆம் ஆண்டுக்கு பின்னர் இவ்வாண்டு அதிகமான உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளதாக புள்ளி விபரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு முதல் ஐந்து மாதங்களிலேயே அதிகமானளவு உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளனர்.

நாட்டில் தற்போது அமைதி நிலவுவதாலேயே இவ்வாறு இவர்கள் வருவதாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக அதிபர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

(கொழும்பு)

1988ஆம் ஆண்டு முதல் மூன்று வருடங்களுக்கு குறையாமல் பதவிவகிக்கும் பாடசாலை அதிபர்களை அவர்களின் தகுதிக்கேற்ப நிரந்தர அதிபர்களாக்க கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அதிபர்கள் தத்தமது பகுதி கோட்டக் கல்வி அதிகாரியினால் விண்ணப்பங்களை உறுதிப்படுத்தி இம் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்விச் சேவை

(8ஆம் பக்கம் பார்க்க)

# பெருமாளை திருப்பி அழைக்கும்படி இந்தியாவை கேட்கிறது மொரிஷியஸ்

## பெற்றோல் விற்பனை இல்லை

(மன்னார்)

பூநகரி ப.நோ. கூ. சங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட நாச்சிக்குடா எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விற்பனை நடைபெறுவதில்லை.

பூநகரியில் அமைந்த எரிபொருள் நிலையத்தை தவிர மாந்தைப் பகுதியில்தான் மற்றொரு எரிபொருள் நிரப்பு நிலையம் உள்ளது. இப்பாதையின் மத்தியில் அமைந்துள்ள நாச்சிக்குடா நிலையத்திலும் பெற்றோல் விநியோகம் இடம்பெற்றால் மோட்டார் வாகனப் பயணிகள் குறை நீங்கும்.

இப்போது நாச்சிக்குடா எரிபொருள் நிலையத்தில் வைத்து தனியார் ஒருவர் மனம்போன விலையில் பெற

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற உறுப்பினர் சுகுமார் இராஜினாமா

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. சுகுமார் (சுயே. I) பாராளுமன்றம் செல்லாமல் தன் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்;

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இராஜினாமாச் செய்ததாக அவர் தெரிவித்தார்.

இவரது இராஜினாமாக் கடிதம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவரது ராஜினாமாகாரணமாக ஏற்படும் வெற்றிடத்திற்கு கே. சபாரெட்னம் நியமனம் பெறுவார். வேட்பாளர் பட்டியலில் விருப்பத் தெரிவு வாக்குகளில் சுகுமாருக்கு அடுத்தஇடம் இவர் பெற்றுள்ளார்என்பதுகுறிப்பிடத்தக்கது. (37)

இச் சம்பவம் அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இறந்தவர் பொன்னையா கருணாகரன் (26) என்பவராவார்.

இவர் இ.போ.ச டிப்போவில் அமைய தொழிலாளியாவார். (37)

## வங்கி கொள்ளை மக்கள் முறியடிப்பு

(கொழும்பு)

கொழும்புக் கோட்டையிலுள்ள வங்கியொன்றில் ஐம்பதாயிரம் ரூபாயைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடிய இருவர் பொது மக்களால் பிடித்து வங்கிப் பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் பொலிசாரிடம் கொடுக்கப்பட்டனர். இச்சம்பவம் நேற்று நண்பகல் நடைபெற்றது. கொள்ளை முயற்சியில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கடற்படையில் முன்பு கடமையாற்றியவராம்.

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் தங்கியிருப்பதற்குக் கொடுக்கப்பட்ட மூன்று மாதகால அவகாசம் முடிவடைந்து விட்டதால் அவரைத் திருப்பி ஏற்றுக் கொள்ளுமாறு இந்திய அரசை மொறிஷியஸ் அரசு வற்புறுத்தத் தொடங்கியிருக்கிறது.

இந்திய விமானப்படை விமானத்தில் இந்திய அதிகாரிகளால் கடந்த மார்ச் மாத இறுதிப் பகுதியில் திருக்கோணாமலையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வரதராஜப்பெருமாள் ... இடங்களிலும் தங்குவதற்கு இடம் கேட்டும் கிடைக்காமையினால் கடைசியில் மூன்று மாதங்கள் ...டும் தங்குவதற்கு மொரிஷியஸ் சம்மதித்தது. பெருமாள் மொரிஷியஸில் தங்கியிருப்பது பரம இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

மூன்று மாதகாலம் முடிவடைந்து வருவதால் அவரைத் திருப்பி ஏற்றுக் கொள்ளுமாறு மொறிஷியஸ் அரசு இப்பொழுது இந்திய அரசை வற்புறுத்திவருகிறது.

பெருமாள் பிரச்சினை பற்றி உத்தியோகரீதியில் கருத்துத் தெரிவிப்பதற்கு இந்திய உயர் அதிகாரிகள் மறுத்துவிட்டனர் ஆனாலும் உத்தியோகப் பற்றற்றமுறையில்பேசுகையில் உயர் அதிகாரி ஒருவர் இந்தியாவுக்கு வரதராஜப்பெரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீதிகள் புனரமைப்பிற்கு கனடிய உதவி

(வடமராட்சி கிழக்கு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி திணைக்கள வீதிகளை புனரமைப்புச் செய்வதற்காக கனடிய அரசாங்கம் இருநூறு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவாகலால யாழ். மாவட்ட பிரதேச சபைகளின் விசேட ஆணையளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் இவ் வீதி வேலைகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார். (36)

## விலை அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த வகைச் சோடாவும் ஏழு ரூபா ஐம்பது சதத்திற்கு விற்கப்படுகிறது.

இதே வேளையில் முத்தையன் கட்டில் பாண் ரூபா 6.00 ஆக விற்கிறதாம். கடைகளில் இப்போது விலைப்பட்டியலும் தொங்க விடப்படுவதில்லை. (58)

## விளையாட்டு வினையாக முடிந்தது

(யாழ்ப்பாணம்)

கோவிலில் சாமிக்குத் தீபம் காட்டுவதுபோல மண்ணெண்ணை விளக்கால் தமக்கைக்குத் தீபம் காட்டினாராம் தம்பியார். அப்போது உடையில் பற்றிய தீ உடலில் பரவியதால் 8வயதுச் சிறுமியான தங்கராசா சீதாலட்சுமி என்ற சிறுமி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

சீதாலட்சுமியின் தந்தையான மன்னாரைச் சேர்ந்த வீ. தங்கராஜா சாட்சியமளிக்கையில்;

எனது மனைவி வெளிநாட்டில் வேலை பார்ப்பவர். குழந்தைகள் எனது பொறுப்பிலேயே இருந்து வருகின்றனர் எனது வீட்டிற்கு அருகிலுள்ள கடையில் நான் பீடிவாங்கச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தையில் சூழ்ச்சிசெய்தால் விளைவு பாரதூரமாக இருக்கும்

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா அரசுடன், நம்பிக்கையுடனும் பரஸ்பர அடிப்படையிலும் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஏதாவது சூழ்ச்சிகள் ஏற்பட்டால் அதன் விளைவு மிக பாரதூரமானதாகவே இருக்கும்.

மேற்கண்டவாறு தமிழீழ

### தளபதி கருணா

விடுதலைப் புலிகள் மட்-அம்பாறை பிராந்திய தளபதி கருணா திகிலிவட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை புதிய கட்டடம் அடிக்கல் நாட்டல், திகலிவட்டை சந்திவெளி படகு சேவை ஆரம்பவிழா ஆகியவற்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. கே. குழந்தைவேல் தலைமையில் இவ்விழா நடைபெற்றது

(8ஆம் பக்கம் பார்க்க)

## "கொழுவி இழுப்பவர்களை காட்டிக் கொடுங்கள்"

(யாழ்ப்பாணம்)

தங்கு தடையின்றி ஒழுங்கான மின்சாரம் பெறுவதற்கு பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதற்காக அந்தப் பகுதிகளில் உள்ள சட்ட விரோத மின் பாவனைகளை அகற்றவும் மின்மார்க்க தடைகளை நீக்கவும் முன்வர வேண்டும் என்றும் மின்சார சபை அதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிரித்திரன் சித்திர கொத்து அறிமுக விழா

(நெல்லியடி)

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் நடாத்தும் சிரித்திரன் சித்திரக் கொத்து நூல் அறிமுக விழா நாளை ஞாயிறு பி. ப. 3 மணியளவில் பருத்தித்துறை இருதயக்கல்லூரி மண்டபத்தில் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும்

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திரு.ம. சிவராசா முதற் சிறப்பு பிரதி பெறுவார்.

## முகாமைத்துவ பயிற்சியாளருக்கு நிர்வாக உத்தியோகம் இல்லை

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் பட்டதாரிகள் முகாமைத்துவ பயிற்சி நெறிக்கு தெரிவானவர்களுக்கு முகாமைத்துவ பயிற்சி மட்டும்தான் வழங்கப்படுமே தவிர நிர்வாக ரீதியான உத்தியோகம் வழங்கப்படுமென்ற உத்தரவாதம் எதுவும் அவர்களுக்கு வழங்கவில்லை.

நடைபெற இருக்கும் இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றால் நிர்வாக ரீதியான பதவிக்கு நியமனம் பெறுவர்.

இத்தகவலை வடக்குக்கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ். கணேசநாதன் நேற்று தெரிவித்தார்.

முகாமைத்துவ பயிற்சி பெற்றவர்களுக்கு மூன்றுமாத பயிற்சி அளிக்கப்படும் மேலும் 150 பேர் இத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவர் ஆனால் இவர்களுக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## 'எதிரிக்கும் மதிப்பளித்தவன் மன்னன் துட்டகைமுனு'

### - ஜனாதிபதி பிரேமா

துட்ட கைமுனு மன்னன் தனது எதிரிகளை மதித்து நடந்தான். பகைவனுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்பதை அவன் உலகுக்கு எடுத்துக் காட்டினான். தற்போதைய கால கட்டத்தில் இது மிகவும் அவசியமாகும்;

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா நேற்று நடைபெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் பேசு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள், சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன் புறம் யாழ்ப்பாணம் (B/1002)

புறொயிலர் குஞ்சுகள் CHRISTOMBU FARM THREE ACRE FARM, BAIRAHA FARM புறொயிலர் குஞ்சுகளை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Bairaha FarM புறொயிலர் குஞ்சுகள் மட்டும் JULY 15 வரை மட்டுப் படுத்தப்பட்ட விநியோகம். JULY 15க்குப்பின் தேவையான அளவு Bairaha Farm புறொயிலர் குஞ்சுகளைபெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (R-343)

### இறைச்சிக்கோழி

சகலவகைஇறைச்சிக்கோழிகள்சுகாதாரமுறைப்படிஉடன் சுத்தம் செய்து, தாமதமின்றி பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்டர் 19 முருகேசர் ஒழுங்கை முத்திரச்சந்தி நல்லூர். (B/1126)


# சட்ட விரோத மின்பாவனை அகற்றப்பட்டு வருகின்றன

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டிப் பகுதியின் சில இடங்களில் சட்ட விரோத மின்னிணைப்புகள் கடந்த சிலதினங்களுக்கு முன் அகற்றப்பட்டன.

மின்சார சபை ஊழியர்கள் இப் பகுதியில் சென்று சட்ட விரோத மின் இணைப்புகளை துண்டித்ததுடன் அதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தவயர்கள், கம்பிகள் மற்றும் உபகரணப் பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.

இந்த நடவடிக்கையினால் இப்பகுதியில் ஓரளவு சட்டவிரோதமின்பாவனை குறைந்துள்ளது.

இதுபோன்று ஏனைய இடங்களிலும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனப் புங்குடுதீவு வாழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். (22)

# ஆசிரியர்கள் உளவியல் அறிவு பெற்றிருப்பின் கற்பித்தல் இலகு

(மட்டக்களப்பு)

- சோமசுந்தரம்

ஆசிரிய சேவையிலுள்ளவர்கள்பொதுக்கல்வி, கற்பிக்கும் பாட விசேட கல்வி அறிவுகளுடன் உளவியல், கல்விக் கொள்கைகள் தொடர்பான அறிவுகளையும் பெற்றிருந்தால் கற்பித்தல் இலகுவானதாக இருக்கும்.

மட். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம் இவ்வாறு ஆசிரிய பயிலுநர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அரசடி ம. வி. மண்டபத்தில் ஆசிரிய பயிலுநர்களுக்கான 9 நாள் திசைகோட்படுத்தல் பயிற்சி நிறைவு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றல் வேண்டும். கற்றல் முடிந்து விட்டது என கருதக் கூடாது. அப்படிக்கருதுபவர்கள் சிறந்த ஆசிரியர்களாக வரமுடியாது என்றும் கூறினார். (37)


### தவறிவிட்டது

கணேசமூர்த்தி அம்பிகையாகிய நான் யாழ்ப்பாணத்திலுள்ள பெருமாள் கோயிலடிக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் ''திருமதி ராஜம்ஸ் 186, அம்புலி போட்டோ, கோயில் வீதி, நல்லூர்'' குறிப்பிட்ட விலாசமுள்ள கடவுச் சீட்டுக்கானதும் வேறு சில முக்கிய குறிப்புகளும் 8. 6. 90 அன்று சைக்கிளில் இருந்து தவறிவிழுந்ததால் இதனைக் கண்டெடுப்போர் தயவு செய்து இல. 31 வைமன் வீதியிலுள்ள ஈழநாத காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறேன். (R 343)


# வணபிதா சந்திரா பெர்னான்டோ சமூக சேவைக்குத் தன்னை அர்ப்பணித்தவர்

--ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை

(மட்டக்களப்பு)

காலஞ்சென்ற வணபிதா சந்திரா பெர்னான்டோசமூக சேவைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். நெருக்கடியான காலகட்டத்தில் அவதியுற்றுத் தத்தளித்த மக்களுக்கு நேசக்கரம் நீட்டி அரவணைத்தவர்.

மேற்கண்டவாறு மட்டக்களப்பு - திருமலை ஆயர் கலாநிதி கிங்ஸிலிசுவாம்பிள்ளை மட்டக்களப்பு பிரஜைகள் குழு முன்னாள் தலைவர் அமரர் வண பிதா சந்திரா பெர்னான்டோவின் இருவருடநினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சார்ள்ஸ் மண்டபத்தில் வித்துவான் சா. இ. கமலநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில்:

சமூக ஒற்றுமையின் இணைப்புப் பாலமாக விளங்கியவர். ஒருவரும் அன்றைய சூழ்நிலையில் இப்பணிக்கு முன்வராத நேரத்தில் மனிதாபிமான உள்ளத்துடனும், துணிச் சலுடனும் சேவையாற்றியவர் என்றார்.

அல்-ஷஹீட்அகமத்லெப்பை நினைவுப்பணி மன்றத் தலைவர் ஜனாப் எம். எச். எம். பஷீர்பேசுகையில்:

அன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களின் இன்னல்களுக்காகப் பாடுபட்ட சமய சமூக பிரமுகர்கள் துப்பாக்கி சூடுகளுக்குத்தான் பலியானார்கள்.

தமிழ-முஸ்லிம் சமூகத்தின் இணைப்புபாலமாக விளங்கிய அல்-ஹாஜ் அஹமது லெப்பை வணபிதா சந்திரா பெர்னான்டோ போன்றவர்கள் சமுதாய சேவைக்குத் தம்மைக் களங்கமற்ற முறையில் அர்ப்பணித்துச் செயற்பட்டமையால் தான் இம்மரணத்தைத் தழுவிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்றார்.

மற்றும்சட்டத்தரனி பொன் வேணுதாஸ், திரு. கதிர்பாரதிதாசன், திரு.அ. அந்தோனிமுத்து ஆகியோரும் உரையாற்றினர். (37)


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

இன்றுமுதல்
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.3
சனி ஞாயிறு
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
STUART STEEN PEDRO HUGHES BENARD GEVRTS
**THE THUNDERING NINJA**
(கராட்டிப் படம்)
சினிமாஸ் கோப்

**லிடோ (யாழ்)**
தினசரி 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
**'ALIENS'**
Packed with Action, Thrill & Suspense
வருகிறது
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
இன்று முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
வி சு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த
A. V .M இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட் களில்
10.30, 2.30, 6.30, 9.30
M G R, ஜெயலலிதா, அசோகன், சுந்தாராஜன், பண்டரிபாய், சோ
நடித்த
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்

**NEW STANLEYS**
AUTHORISED DISTRIBUTORS FOR C. I. C PAINTS
Dealers in: Paints, Hardware and Building Materials Etc.
யாழ் நகரில்
டியூகோ, டியூலக்ஸ்
பென்ரலைற் பெயின்ற்
வகைகளுக்கு
உத்தரவு பெற்ற வியாபார நிறுவனம்.
**நியூ ஸ்ரான்லீஸ்**
95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B-1130)


# மரங்கள் வெட்ட தடை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதியில் உள்ள மரங்கள் யாவும் வெட்டுவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

இத்தடையை தீவுப்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் விதித்துள்ளனர். தீவுப்பகுதியில் இயற்கை வள அழிவைத் தடுக்கும் நோக்குடனேயேஇத் திட்டம் செயற்படுத்தப் படுகின்றது. இந்த தடை நடவடிக்க உடனடியாக அமுலுக்கு வருகின்றது. (15)


## கிளிநொச்சிக் கச்சேரி

# கேள்விகோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக்கச்சேரிதிணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க்காட்டப்படும் கட்டிடத்தை திருத்துவதற்கும் புனரமைப்பதற்குமான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினத்தில் பி. ப. 12.30 மணிக்கு கேள்விகள் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேவைப்படும் பதிவுத் தொகை மீளப் பெறக்கூடிய வைப்புப்பணம், மீளப் பெறமுடியாத கொடுப்பனவு ஆகியன கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல. | வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகை | மீளப்பெறக் கூடியவைப்புப் பணம் | மீளப்பெற முடியாத கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| 01 | கிளிநொச்சி மாவட்ட உரக் | | | |

## விக்னா ரியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த

## Diploma in Computer Programming and Data Processing

(கம்பியூட்டர் கல்விகள்)

உரக்
களஞ்சியம் ரூ.300,000.00 500/- 250/-

இவ் வேலைக்குரிய கேள்விப்பத்திரப் படிவங்களை மீளப் பெறக்கூடியதும் மீளப் பெறமுடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990. 06. 22 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. மாணிக்கவாசகர்
திணைக்கள கேள்விச்சபைத் தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும்,
அரசாங்க அதிபரும்.

கிளிநொச்சி மாவட்டம்.

(B- 1106)

---

தனித்துவம் வாய்ந்த
ஒரே நிறுவனம்)

# 91 DAY CLASSES

(8.00 - 1.00)

அலகு 1 இலிருந்து ஆரம்பம்
(12.6.90)

மு. குறிப்பு:
(1) எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.
(2) முழுப் பாடத் திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும்.
(3) முற்றிலும் பாடசாலை போன்றது.
(4) விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.
(5) பரீட்சைகள் நடாத்தப்படும்.

(B 1012)

---

## (கம்பியூட்டர் கல்விகள்)

❋ BASIC ❋ LOTUS 1-2-3 ❋ WORD PROCESSING

ஆரம்பம்:

வார இறுதி நாள் வகுப்புக்கள் 9-6-1990

வார நாள் வகுப்புக்கள் 11-6-1990

விபரங்கட்கு:

## North Ceylon Technical Institute

14 St. PETERS LANE, JAFFNA.

(B.983)

---

## சுன்னாகத்தில் சிறந்த அரிவு வேலைகள் அனைத்திற்கும்...

## சிறந்த தளபாடங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும்.

❋ தீராந்தி ❋ பலகை ❋ நீப்பைகள் பெற்றுக்கொள்ளவும்...

உடனே விஜயம் செய்யுங்கள்

# தயா மர அரிவு ஆலை

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

(B.976)

# A/L அசேதன இரசாயனம்


## S,p,d தோகுப்பு மூலகங்கள்

### தொடர் - 3 -

**சத்தீஸ்**

உதாரணம் 2

இத்தொகுதிக்கு $AlCl_3$ சேர்க்கப்படும் போது நோக்கல்கள் என்ன? ஏன்?




விடை
(1) Fe கரையும்
(2) வாயுக்குமிழ் ($H_2$) வெளியேறும்
(3) மஞ்சள் நிறம் சிவப்பாக மாறும்
(4) கரைசல் கலங்கலாக ($Al(OH))_3$ வீழ்படிவாகும்) மாறும்
(5) அமிலப்புகை (HCl) வெளியேறும்.
(6) வெப்பம் வெளிவிடப்படும்.

காரணம் : $AlCl_3 + 3H_2O \rightleftharpoons Al(OH)_3 + 3HCl$

$AlCl_3$ வன்மையாக நீர்ப்பகுப்படைவதால் விளைவுக்கரைசல் அமிலமாக இருக்கும்

உதாரணம் 3

மக்னீசியம் குளோரைட்டின் நீர்க்கரைசல் மாதிரி ஒன்று உலர்நிலைக்கு ஆவியாக்கப்பட்ட போது திணிவுப்படி Mg = 35·5% , Cl = 52.6% , O = 11·9% கொண்ட திண்ம மீதி விளைவானது (Mg = 24 ; Cl = 35·5 ; O = 16)

(1) விளைவின் அனுபவச் சூத்திரம் என்ன?
(2) உலர் $MgCl_2$ ஏன் தோன்றவில்லை?
(3) இத் திண்ம மீதி யாதாக இருக்கலாம்?

விடை

(1)

| | Mg | Cl | O |
|---|---|---|---|
| நிறை% | 35·5 | 52·6 | 11·9 |
| அணுவிகிதம் | $\frac{35·5}{24}$ | $\frac{52·6}{35·5}$ | $\frac{11·9}{16}$ |
| | 1·479 | 1·48 | 0·744 |
| | $\frac{1·479}{0·744}$ | $\frac{1·48}{0·744}$ | $\frac{0·744}{0·744}$ |
| | 2 | 2 | 1 |

∴ அனுபவச் சூத்திரம் $Mg_2Cl_2O$.

(2) $MgCl_2$ இன் ஒரு பகுதி நீர்ப்பகுப்பால் MgO ஆக மாற்றப்படும்.
$MgCl_2 + H_2O \rightleftharpoons MgO + 2HCl$

(3) $MgCl_2$. MgO

உதாரணம் 4

ஒரு மூல் $PCl_5$ [illegible]

(1) விளைவுக் கரைசலின் PH எந்த வீச்சத்தில் இருக்கும்? ஏன்?
(2) விளைவுக் கரைசலை நடுநிலையாக்க எத்தனை மூல் NaOH தேவை?
(3) இக்கரைசலுக்கு பின்வருவனவற்றைச் சேர்க்கும்போது உண்டாகும் விளைவுகள் எவை?
(a) 6 mol NaOH (b) 7 mol NaOH (c) 8 mol NaOH

விடை

(1) PH < 7. காரணம் $PCl_5$ முற்றாக, வன்மையாக நீர்ப்பகுப்படைவதால் விளைவுக் [illegible]

# ஐரோப்பாவின் அதிமுக்கிய அங்கம்

# நேட்டோ கூட்டமைப்பு

## பிரிட்டிஷ் பிரதமர்



(லண்டன்)
நேட்டோ கூட்டணி அமைப்பு, காலத்தின் ஒரு தேவை என்பது மட்டுமன்றி ஐரோப்பாவைப் பொறுத்த வரை மிகவும் அதிமுக்கியமான ஓர் அங்கம் என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் வலியுறுத்தியிருக்கிறார்.

ஸ்கொட்லாந்தில் நேட்டோ அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

ஐரோப்பாவில் அணு ஆயுத படைக் கலங்கள் தொடர்ந்து நிலைபெற்றிருக்கவேண்டியது இன்றியமையாத அவசியம்.

மேற்கு உலகக் கூட்டுப்பாதுகாப்பு நிலையில் அமெரிக்காவும், படைகளும் ஆயுத வியூகங்களும் தொடர்ந்து நிலை பெற வேண்டியதும் அவசியம் என்றும் திருமதி தட்சர் கேட்டுக் கொண்டார்.

அணு ஆயுத ஒழிப்புப் பற்றி அவர் கூறிய போது "அணு ஆயுதத்திற்கு அஞ்சித் தான போர் நடை பெற்றுள்ளது. சமாதானத்தை நான் விரும்புகின்றபடியால் அணு ஆயுதத்தைவிரும்புகிறேன்" என்று கூறியிருந்தார்.

ஜேர்மனியின் ஒருங்கிணைப்புப் பற்றிக் குறிப்பிட்ட தட்சர் ஐக்கியஜேர்மனி நேட்டோ கூட்டணி அமைப்பில் இருக்க வேண்டியதுஅவசியம்என்றார்.

மத்திய கிழக்கில் எண்ணை வளத்தினை அடுத்து வரும் நூற்றாண்டிலும் மேற்கு உலகம் நம்பியிருக்க வேண்டிய நிலையில் மத்திய கிழக்கில் மேற்குலக நாடுகளின் பாதுகாப்பும், செல்வாக்கும்பேணப்படுதல் அவசியம் என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

நேட்டோ அமைப்பின் கொள்கையில் சில மாற்றங்கள் தேவை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

# உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட போட்டி

## நேற்று ஆரம்பமானது

(ரோம்)
சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம்நடாத்தும்நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 8ஆம் திகதி மிலான்நகரில் ஆரம்பமானது.

ஜூலை மாதம் எட்டாம் திகதி வரை இப் போட்டி நடைபெறும்.

டியூரின், ஜெனோவா, யூடின், பெரோனா, பொல்லொக்னாபுளோரண்ஸ் நேப்ளஸ்,பாரிபாலர் மோகாகிலியாறி ஆகிய நகரங்களில் உள்ள விளையாட்டு மைதானங்களில் இப்போட்டி நடைபெறும்.

உலககிண்ணத்தை கைப்பற்றும் இறுதி ஆட்டம் ஜூலை எட்டாம் திகதி ரோம் நகரில் உள்ள பிரமாண்டமான ஒலிம்பிக் அரங்கில் நடைபெறும்.

# 21-ம் நூற். இந்தியாவிலேயே கூடுதலான சனத்தொகை

(ஜெனிவா)
இந்தியாவில் சனத்தொகை மிக வேகமாக அதிகரித்து வருகிறது. தற்பொழுது உலகிலேயே சனத்தொகை அதிகமாக உள்ள நாடு சீனாவாகும். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கையின் படி இருபத்தியோராம் நூற்றாண்டில் இந்திய மக்கள் தொகை சீன மக்கள் தொகையைமிஞ்சி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2005ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகை 144 கோடியாக இருக்கும் என்றும் இது முன்பு எதிர்பார்த்ததிலும் பார்க்க 21 6 கோடி அதிகமாக இருக்குமென்றும் ஐக்கிய நாடுகள்சபையின் உலக மக்கள் தொகைபற்றிய 1990ஆம் ஆண்டிற்கான ஆய்வறிக்கை கூறுகிறது.

மேலும் இருபத்தியோராம் நூற்றாண்டில் இந்திய மக்கள் தொகை சீனமக்கள் தொகையைமிஞ்சிவிடும் என்றும் அவ் அறிக்கை கூறுகிறது.

# பொற்கோயில் ஆண்டு தினம்

## பஞ்சாப்பில் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)
பஞ்சாப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹர்த்தால் மற்றும் வேலைநிறுத்த நடவடிக்கை ளினால் பஞ்சாப் மாநிலம் ஸ்தம்பிதமடைந்தது.

இராணுவத்தினர் முக்கிய இடங்களில் பாதுசாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

போக்கு வரத்து எதுவும் [illegible]பட்டனர். வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டன.

திருமதி இந்திரா காந்தி ஆட்சியின் போது பொற்கோயிலில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆறாவது ஆண்டு தினத்தை முன்னிட்டு இது இடம்பெற்றது.

சில ரயில்கள் படையினரின் பாதுகாப்புடன் சேவையாற் [illegible]

# தேசிய அரசாங்கம் அமைக்க ராஜீவ் காந்தி மறுப்பு

(புதுடில்லி)
தேசியஅரசாங்கம் அமைக்க வேண்டும் என்று இந்திய அரசு விடுத்த கோரிக்கையை இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னால் பிரதமருமான ராஜீவ்காந்தி மறுத்துள்ளார்.

தேசியப்பிரச்சினை ஏற்பட்டால் மட்டுமே தேசிய அரசு அமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் மற்றும் படிஇந்த தேசிய அரசு அமைக்க இந்திரா காங்கிரஸ் ஆதரவு தரமாட்டாது. என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஆசியாவில்25000 அணுவாயுதம் அழிக்கப்படும்!

இரு வல்லரசுகளுக்கும் இடையே நடைபெற்ற உச்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் ஆயுதக்குறைப்பிற்கு மிகவும் துணைபுரிந்ததாக தெரிவிக்கப்படுகிறது

அமெரிக்காவும் ருஷ்யாவும் கூட்டாகச் சேர்ந்து 25,000 அணுவாயுதங்களை ஒழிக்கப் பேச்சுவார்த்தைகள் வழி வகுத்தன.

[illegible] வாயுதங்களையும் நீர் மூழ் [illegible] கொண்டுள்ளது. இவை அகற்றப்படுவதன் மூலம் ஆசியப் பிராந்தியத்தின் பந்தோபஸ்தை உறுதிப்படுத்த முடியும்.

கடந்த சில காலங்களாக கடற்படை நடவடிக்கைகளில் அமெரிக்கா இப் பிராந்தியத்தில் தீவிர அக்கறை காட்டி வருவ[illegible] தெரிந்ததே.

ஆசி[illegible]-பசுபிக் பிராந்தியத்தில் 2[illegible] அணுவாயுதங்களை [illegible]

சோல்ட்-1 ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதை அடுத்து அமெரிக்க அணுவாயுதங்கள் 7,600 முதல் 15,000 ஆகவும் ருஷ்யஅணுவாயுதங்கள் 2,750 முதல் 10,000 வரையும் அதிகரித்தன.

# பாகிஸ்தான் ஒற்றர் கைது

(காபூல்)
[illegible] ஆப்கான் புலன் [illegible] பிரிவினர் கைது செய்து[illegible]னர்.

இவர்களில் ஒருவர் ராவல் பிண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பாகிஸ்தான் இராணுவத்தில் சேவையாற்றி பின்னர் ஒற்றர் பிரிவில் சேர்ந்தவர் என்றும் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

சவூதி அரேபிய இராணுவ அதிகாரிகள் ஆப்கான் கெரில்லாக்களுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அரபு நாடுகளில் தயா [illegible]

(1) PH < 7. காரணம் $PCl_5$ முற்றாக, வன்மையாக நீர்ப்பகுப்படைவதால் விளைவுக் கரைசல் அமிலமாக இருக்கும்.

$$PCl_5 + 4H_2O \rightarrow H_3PO_4 + 5HCl$$

(2) 8 mol (5 mol HCl க்கு 5 மூல் NaOH தேவை. 1 mol $H_3PO_4$ க்கு 3 mol NaOH தேவை)

(3) a) NaCl, $NaH_2PO_4$ b) NaCl, $Na_2HPO_4$ (c) NaCl, $Na_3PO_4$

உதாரணம் 5

(1) NaCl (aq), $MgCl_2$ (aq), $AlCl_3$ (aq) என்பவற்றை உலர்நிலை வரை ஆவியாக்கி வெப்பமாக்கினால் பெறப்படும் மீதிகள் எவை? ஏன்?

(2) $MgCl_2$ (aq) இல் இருந்து $MgCl_2$ (s) ஐ பெறுவதற்கான (மின் பகுப்பு அற்ற) ஒரு முறையை சமன்பாடுகள் நிபந்தனைகளாற் சுட்டிக்காட்டுக.

விடை

(1) NaCl, MgO, $Al_2O_3$ காரணம் NaCl (aq) நீர்ப்பகுப்படையாது ஆனால் $MgCl_2$(aq) $AlCl_3$ (aq) என்பன நீர்ப்பகுப்படையும்.

(2) $MgCl_2 + 2NaOH \rightarrow Mg(OH)_2 \downarrow + 2NaCl$

$$Mg(OH)_2 \xrightarrow{\Delta H} MgO + H_2O$$

(1) ஊது உலை
(2) 800° - 900° C

$$MgO + C + Cl_2 \rightarrow MgCl_2\ (s) + CO\uparrow$$

(3) உலர் $Cl_2$ கீழ் இருந்து மேல் நோக்கிச் செலுத்தப்படும்.

உதாரணம் 6

பின்வரும் மாற்றத்தை நிகழ்த்துக.

$$FeCl_3\ (aq) \rightarrow FeCl_3\ (s)$$

விடை

$$FeCl_3 + 3NaOH \rightarrow Fe(OH)_3 \downarrow + 3NaCl$$

$$2Fe(OH)_3 \xrightarrow{\Delta H} Fe_2O_3 + 3H_2O$$

$$Fe_2O_3 + 3C \underset{1500°C}{\leftrightharpoons} 2Fe + 3CO$$

$$2Fe + 3Cl_2 \xrightarrow{\text{உலர்}Cl_2/\Delta H} 2FeCl_3\ (s)$$

பயிற்சி வினா 1

NaCl, $AlCl_3$, $PCl_5$ என்பன நீருடன் அனுபவிக்கும் தாக்கங்களை சமன்பாடுகளுடன் வேறுபடுத்தி விளக்குக.

பயிற்சி வினா 2

பரிசோதனை ஒன்றுக்கு 1M $AlCl_3$ (aq) தேவைப்படுகின்றது இதனைத் தயாரிக்க விரும்பிய மாணவன் ஒருவன் 1 மூல் திண்ம உலர் $AlCl_3$ ஐ செம்மையாக நிறுத்தெடுத்து காய்ச்சி வடித்த நீரிற் கரைத்து கரைசலின் கனவளவு 1 $dm^3$ ஆகும் வரை ஐதாக்கினான்.

(1) இச்செய்முறையில் உள்ள தவறைச் சுட்டிக்காட்டி விளக்குக.
(2) மேல் செய்முறையின் போது மாணவன் அவதானிக்கக்கூடிய நோக்கல்கள் எவை?
(3) 1M, $AlCl_3$ (aq) தயாரிப்பதற்கான முறையை காரணத்துடன் விபரிக்கவும் (Al=27)

(தொடரும்)

டிருந்தனர்.

போக்கு வரத்து எதுவும் நடை பெறவில்லை கார்களில் சென்றவர்கள் இடைவழியில் தீவிரவாதிகளால் நிறுத்தப்

சில ரயில்கள் படையினரின் பாதுகாப்புடன் சேவையாற்றின. இரவு நடந்த மோதல் சம்பவத்தில் பத்துப்பேர் வரை மரணம் அடைந்தனர்.

## கூடைப் பந்தாட்டப் போட்டி

(விளையாட்டுநிருபர்)

யாழ் வை.எம் சி.ஏ அதன் நூறாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தி வரும் கூடைப் பந்தாட்டப் போட்டியில் செஞறலைட்ஸ் விளையாட்டுக் கழகம் ஊர்காவற்றுறை விளையட்டுக்கழகத்தை 31-21 புள்ளிகள் கணக்கிலும் கிறீன்வீல்ட்ஸ் விளையாட்டுக் கழகம் சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை 34-26 புள்ளிகள்வித்தியாகத்தில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடுவதற்கு தகைமை பெற்றுள்ளது.

இப்போட்டிகள்யாவும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. (42)

### வற்றாப்பளை பொங்கல்

## கோவில் பரிபாலன சபையுடன் ஒத்துழைக்கக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயமான வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு பக்தர்களுக்கு முழுச் சௌகரியத்தை வழங்கக்கூடிய விதத்தில் ஒழுங்குகளைக் கவனிக்க தொண்டர் ஸ்தாபனங்கள், விடுதலைப் புலிகள், கோவில் பரிபாலன சபை, அரசாங்க அதிகாரிகள் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு ஒன்று கடந்த 27 ஆம் திகதி கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

அடியார்களின் தேவைகளைக் கவனிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதாக முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் மனோ மகா நாட்டில் தெரிவித்தார்.

மனோ மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அன்று சேவையில் ஈடுபடவிருக்கும் சகல விதமான அத்தியாவசிய சேவைப் பிரிவுகளுக்கும் மக்கள் முடிந்த அளவிலான ஒத்துழைப்பை நல்குமாறும், பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றிற்கு பங்கம் விளைவிக்காமல் கோவில் பரிபாலன சபையோடு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார். (58)

## தீ விபத்தில் சிறுமி பலி

(யாழ்ப்பாணம்)

கைவிளக்கில் இருந்து தவறுதலாகத் தீப்பற்றிக்கொண்டதனால், திருக்கேதீஸ்வரம் வெட்டிமுறிப்பைச் சேர்ந்த தங்கராசா சீதாலட்சுமி என்னும் எட்டு வயதுச் சிறுமி காலமானார்.

இச்சம்பவம் மே மாதம் 13 ஆம் திகதி நடைபெற்றது. இவர் 13 ஆம் திகதி திருக்கேதீஸ்வரத்திலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு இவர் நிலைமை மோசமாக இருந்ததினால் மே மாதம் 25ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அங்கும் சிகிச்சை பலனளிக்காததினால் ஜூன் மாதம் 7 ஆம் திகதி மரணமானார். (ம)

வருவ[illegible] தெரிந்ததே.

ஆசி[illegible]-பசுபிக் பிராந்தியத்தில் 2[illegible] அணுவாயுதங்களை ருஷ்யாவும், 4500 அணுவாயுதங்களை அ[illegible]க்காவும் கொண்டுள்ளது.

அதிகாரிகள் ஆப்கான் கெரில்லாக்களுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அரபு நாடுகளில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளை கெரில்லாக்கள் பாவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 16-04-1938
உதிர்வு: 01-06-1988
திதி: 09-06-1990

அமரர்
கதிரிப்பிள்ளை நடராஜா

எங்கள் நினைவுகளில்
என்றென்றும் உயிர்த்திருந்து
எமக்கு வழிகாட்டும்
ஏற்றமிகு எம் தலைவ,
உங்கள் கனவுகளை...
உணர்வுகளின் ராசங்களை
நாங்கள் நிலைநிறுத்த
நன்றியுடன் உழைத்திடுவோம்
நீங்கள் அமைதிகொள்க ...
நிறைவுடனே துயில்கொள்க ..

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்

B.1119

# 150 ஆம் நாள் நினைவஞ்சலி


மலர்வு:
05
-
07
-
1952





உதிர்வு:
11
-
01
-
1990





## திதி: 09.06.1990

"ஹப்பிரெக்ஸ்ற்" பங்காளர்

# சின்னையா கனகரத்தினம் (மகாலிங்கம்)

அவர்கள்

அரியாலை ஈன்றெடுத்த
அரியதோர் முத்து
தெரியாதோர் இன்றாக
தெவிட்டாத முத்து
சின்னையா மகாலிங்கச்
சிரிக்கின்ற முத்து
என்னையா எங்குற்றாய்
எமையெல்லாம் விட்டு

நூற்றி ஐம்பது
நாளாக இன்று
போற்றிப் பரவிநாம்
நினைக்கின்றோம் நும்மை!
மனைவி மக்கள்
மருமக்கள் எல்லாம்
நினைக்கின்றார் நின்னை!!
நினைத்திடுவாய் எம்மை!!!

மீளாத்துயில் கொண்டவரை நினைத்து, ஆறாத்துயரில் மாளும்

மனைவி, மக்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஊழியர்கள்.

# கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கியும் வேலை ஆரம்பிக்கவில்லை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியில் உள்ள பாடசாலைகள் சிலவற்றிற்கு புதிய கட்டிடங்களை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் கட்டிடவேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் அப்பாடசாலைகளின் மாணவர்கள் இடப்பற்றாக்குறையினால் தொடர்ந்தும் கஷ்டமுற வேண்டியுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து குடத்தனை அமெரிக்க மிஷன் பாடசாலை, குடத்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை, ஆழியவளை சீ. சீ. த. க. பாடசாலை செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியிலிருந்து செம்பியன் பற்று அ. த. க. பாடசாலைக்கும் நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டி முடிப்பதற்கான ஒப்பந்தத்தை எடுத்துக்கொண்ட ஒப்பந்தக்காரர் கட்டிட வேலைகளை இன்னமும் ஆரம்பிக்காமல் இருந்து வருவதாக புகார் செய்யப்படுகின்றது.

ஒப்பந்தக்காரரைக்கொண்டு வேலையினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மேற்கொள்ள வேண்டுமென பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் புகார் செய்கின்றன. (36)

## புதிர்ப் போட்டியின் இரண்டாம் சுற்று முடிவு

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி ஞாபகார்த்த புதிர்ப் போட்டி இரண்டாம் சுற்றில் பதினெட்டுப் பாடசாலைகள் மூன்றாம் சுற்றுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கமும் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்தும் இப் போட்டிகளில் தெரிவுக்கு உள்ளாகிய பாடசாலைகள் பின்வருமாறு.

மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், வல்வை மகளிர்கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், பளைமகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி, வேம்படி மகளிர்கல்லூரி, நயினாதீவு மகாவித்தியாலயம், கரவெட்டிவிக்கினேஸ்வராக்கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம், பரியோவான் கல்லூரி, சன்மார்க்க மகாவித்தியாலயம், ஆகிய பாடசாலைகளே இரண்டாம் சுற்றுப்போட்டியிலிருந்து மூன்றாம் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டவை ஆகும். மூன்றாம் சுற்றுப் போட்டிகள் பற்றிய நாளும் திகதியும் பின்பு அறிவிக்கப்படும் என விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அறிவித்திருக்கிறது.

## தென்னைக்கு மானியம்; விண்ணப்பம் சிங்களத்தில்

(யாழ்ப்பாணம்)

தென்னை பயிரிடுவதற்கான மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதனை ஊக்குவிக்க தென்னை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் அரசாங்கம் மூன்று மொழிகளில் படிவங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்தும் இச்சபை இது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை தனிச்சிங்களத்திலேயே வழங்கிவருகிறது. இதனால் தமிழ் மக்கள் மொழி தெரியாமல் அவதிப்படுகின்றனர்.

ஏக்கர் ஒன்றுக்கு நாலாயிரத்து எண்ணூற்றி அறுபது ரூபா பயிர்ச் செய்கையாளருக்கு இத்திட்டத்தின்படி வழங்கப்படும்.

## பிள்ளைகளை படிப்பிக்காமல் வேலைக்கு அனுப்பவேண்டாம்

(விசேடநிருபர்)

''குடிமைத் தொழிலை விட்டொழிக்க தென்மராட்சிப் பகுதி சிகை அலங்கரிப்பாளர்கள் முன்வந்தது கண்டு பெருமைப்படுகின்றோம் அதுபோல பிள்ளைகளை படிப்பிக்காமல் இளம் வயதில் தொழில் கற்க அனுப்பி விடுவதையும் கைவிட வேண்டும்.

கூடுமான வரை பத்தாம் வகுப்பு வரையாவது ஒவ்வொரு சிறாரும் கல்வி கற்க ஒழுங்கு செய்ய வேண்டியது பெற்றோரது தலையாய கடமை.

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்க தென்மராட்சிக் கிளை அங்குரார்ப் பணம் செய்து வைக்கப் பட்டபோது சங்கச் செயலாளர் திரு வே. தியாகராசா, மேற்கண்டவாறு கூறினார்.

தலைவர் அ.அல்பேட் தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

தலைவர் க.சுந்தரம் உபதலைவர்ச.நாகமணி, செயலாளர் சி.பரமு, உபசெயலாளர் க. யோகநாகதன், பொருளாளர் மு. கைலாயபிள்ளை பத்தொன்பது பேர் கொண்ட கண்காணிப்புக்குழுவும் மூன்று பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (21)

## உபஉணவுப்பயிர் செய்யும் விவசாயிகளுக்குஉரக்கடன்

(யாழ்ப்பாணம்)

வெங்காயம், மிளகாய், சிறுதானியம் போன்ற உபஉணவுப் பயிர்ச் செய்கை விவசாயிகளுக்குத் தேவையான உரம் கடனாக வழங்கப்படும்.

நேற்று முன்தினம் யாழ் அரசாங்க அதிபர் பணிமனையில் நடந்த மாவட்ட விவசாயிகள் குழுக் கூட்டத்தில் இத்திட்டம் தெரிவிக்கப்பட்டது.

... குள் விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்தப்படாவிடின் இரண்டுவீத வட்டி அறவிடப்படும்.

## ஒட்டுசுட்டான் ம. வி. விளையாட்டுப் போட்டி

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் மகா வித்தி...

...சாலை எத்தனையோ வசதிகளின்றி இருக்கின்ற போதி...

## குளங்கள் புனரமைப்பு

(வந்தாறுமூலை)

பற்று உதவி அரசாங்க அதிபர் திரு. கே, கனகரெத்தினம் ஈராளக்குளம், கிராம சேவை உத்தியோகத்தருக்கு உட்பட்ட சிறுநீர்ப் பாசன குளங்களான வெள்ளையன் சேனைக்குளம், குடாவெட்டைக்குளம், புளிச்சைசக் கொடிச்சேனைக்குளம், முள்ளிவட்டவான்குளம், விற்பனை மடுக்குளம் போன்ற குளங்களை சென்று பார்வையிட்டார். இக் குளங்களின் அபிவிருத்தி வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

இவ் வேலைகள் கமநல சேவை திணைக்களத்தின் புனர் நிர்மாண திட்டத்தின் கீழ் செய்யப்பட்டு வருகிறது. (29)

## சென் நீக்கிலஸ் வெற்றி

(விளையாட்டு நிருபர்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அப்போதிக்கரி கிண்ணத்திற்காக நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் நாவாந்துறைசென் மேரிஸ், சென் நீக்கிலஸ்விளையாட்டுக்கழக அணிகளுக்கு இடையில் நடைபெற்றபோட்டியில் சென் நீக்கிலஸ் அணி ஒன்றுக்குப் பூஜியம் என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென் நீக்கிலஸ் கோல் காப்பு வீரன் எஸ். அலோசியஸ் ஜெயக்கொடி பல கஷ்டமான பந்துகளை வெகு திறம்பட தடுத்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

சென் அந்தனீஸ் விளையாட்டு அரங்கில்நடைபெற்ற இப் போட்டிக்குக் கப்டன் டீ. ர. எம். குணசிங்கம் என். பிரான்சிஸ் ஆகியோரின் உதவியுடன் ஏ. தேவா மத்தியஸ்தம் செய்தார். (42)

## பொருட்காட்சியும் பரிசளிப்பு விழாவும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிராந்திய தொலைக் கல்வி நிலைய பொருட்காட்சியும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி புனித சிசிலியா மகளிர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (37)

மட்டக்களப்பு

# மாநகரசபை வீதிகளில் குப்பை கொட்ட வேண்டாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளில் குப்பைகளை கொட்ட வேண்டாம்.

இவ்வாறு மாநகர சபை ஆணையாளர் திரு. கே.கார்த்திகேசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு

அலுவலகத்தில் டிராக்டர்கள் பற்றாக்குறை காரணமாக மாதாந்தம் ரூபா 18,000 டிராக்டர்களுக்கு வாடகை செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் வரியிறுப்பாளர்கள் நிர்வாகத்துடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும்.

குப்பைகளை சேகரித்து உங்கள் வளவுகளுக்குள் வைத்திருக்கவும்.

கட்டிடங்கள் உடைக்கப்பட்ட கற்கள் ஓடுகள் சுண்ணாம்பு கட்டிகள் மரம்வெட்டும் துண்டுகள் போன்ற கழிவுகளை தெரு ஓரங்களில் கண்டிப்பாக போட வேண்டாம். இதனை மீறினால் சபையினால் அபராதம் அறவீடு செய்யப்படும்.

தெரு சுத்திகரிப்பு ஊழியர்கள் கடமையில் ஈடுபடும் போது குப்பைகளை அவர்களிடம் ஒப்படையுங்கள் என அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (37)

## அதிபர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் பிரச்சினைகளும் எதிர்கால நடவடிக்கைகளும் பற்றிய கலந்துரையாடல் யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களுக்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் யாழ். கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தவுள்ளது.

இக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

யாழ். மாவட்டப் பாடசாலை அதிபர்கள் அனைவரும் மேற்படி கலந்துரையாடல் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஸ்டான்லி டொமினிக் கேட்டுள்ளார்.

## சுந்தரமூர்த்தி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வீரர்கள் ஞாபகார்த்த தின விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் செல்வன் பொன்னம்பலம் சுந்தரமூர்த்தி அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தை பெற்றுள்ளார்.

கலாசார அலுவல்கள் அமைச்சினதும், சமூக கலாசார அமைச்சினதும் ஆதரவுடன் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் தமிழ்ப் பிரிவில் இவர் முதலிடத்தைப் பெற்றார்.

இவர் யாழ். நல்லூர் சாதனாப் பாடசாலையில் ஆண்டு 11ல் கல்வி பயிலும் மாணவராவார்.

''தேசிய வீரர்கள்தினத்தின் முக்கியத்துவம்'' என்ற தலைப்பில் இக் கட்டுரையை இம் மாணவர் எழுதினார்.

இவரின் இவ் வெற்றியானது இப் பாடசாலையின் வரலாற்...

## யாழ். வீதிப் போக்குவரத்துச் சீர்செய்வதில் பெண்கள்

(விசேட நிருபர்)

யாழ்நகர்ப்பகுதிவீதிபோக்குவரத்து சீர்படுத்தும் பணியில் பெண்களும் ஈடுபடுத்தப்பட இருக்கின்றனர்.

இதன் முதற்கட்டமாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் சிலருக்கு யாழ் மாநகர சபை வீதிப் போக்குவரத்து சீரமைப்புப் பிரிவினர் பயிற்சி வழங்கி உள்ளனர்.

நேற்று முன்தினம் (7.6 90) மாலை யாழ் ஆஸ்பத்திரி வீதி வேம்படிச் சந்தியில் நான்கு மாணவிகள் வாகனப் போக்குவரத்தைச் சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. (21)

## பௌர்ணமிக் கலை விழா

(யாழ்ப்பாணம்)

நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று பௌர்ணமிக் கலை விழா நடைபெற்றது.

இக் கலை விழாவை யாழ் மாநகராட்சி மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

மாநகரஆணையாளர் திரு. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வி.கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்திசகோதரர்களின் நாதஸ்வரமும், மணிவிழாக் கண்ட தமிழறிஞர் சொக்கனுக்கு பாராட்டுவிழாவும் '' நிலவே நீ சாட்சி என்றதலைப்பில் ஆர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் பக்தி இசையும் கவியரங்கமும் இடம் பெற்றன.

இந் நிகழ்ச்சியில் சிறப்புச் சொற்பொழிவினை இ.ஜெயராஜ் நிகழ்த்தினார். கவிய...

## கொமய்னி கவிதைப் போட்டி முடிவுகள்

(மட்டக்களப்பு)

இமாம் ஆயத்துல்லாஹ் கொமய்னிஓராண்டு நினைவை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட இமாம் கொமய்னி நற்பணி மன்றம் மாவட்ட ரீதியாக ஏற்பாடு செய்த கவிதைப் போட்டிகள் வருமாறு:

1 ஆம் இடம் எம். ஐ. எம். சுபைர், 2 ஆம் இடம் ரீ. எல். ஜப்பர்கான், 3 ஆம் இடம் ஏ. எச். எம். ஜிஹார்.

இவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் அண்மையில் நினைவு விழாவில் வழங்கப் பட்டது. (37)

## ஆசிரியர் கடத்தப்பட்டார்

(காலி)

ஸ்ரீலங்கா இராணுவத்தினரைப்போன்று சீருடையணிந்து ஆயுதபாணிகளாக வந்த இளைஞர் சனியன்று இரவு மாத்தறையில் பட்டதாரி ஆசிரியர் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

தனிப்பட்ட தகராறு ஒன்று காரணமாகவே பியசேன சமரதுங்க என்ற ஆசிரியர் கடத்தப் பட்டாராம்.

ஆசிரியரைத் தேடிக் கண்டு பிடித்துத் தருமாறு, ஆசிரிய...

மையில் அங்குரார்ட்பண வைபவம் நடைபெற்றது.

கிளைச் சங்கநிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர். விபரம் வருமாறு:

குழுக் கூட்டத்தில் இத்திட்டம் தெரிவிக்கப்பட்டது.

இவ் வட்டிஇல்லாக் கடன் ஆறு மாதங்களுக்கே செல்லுபடியாகும். ஆறு மாதத்திற்

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதிபர். திரு. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு ஒட்டுசுட்டான் பிரதேச விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு. வேணு கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

கடந்த மூன்றாண்டுகளுக்குப் பின்னர்இது நடைபெற்றதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

அதிபர் திரு. சிவசம்பு தமது உரையில் இப் பாடசாலை எத்தனையோ வசதிகளின்றி இருக்கின்ற போதிலும் கூடிய புள்ளிகளை பெற்று க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்ததை பாராட்டினர்.

இளைப்பாறிய விஞ்ஞான கல்வி அதிகாரி திரு ஏ. கே. மகாலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

நீலாம்பரம் முதலாவது இடத்தையும், செவ்வந்தி இரண்டாம் இடத்தையும். செந்தாமரை மூன்றாம் இடத்தையும் பெற்றது.

இவரின் இவ் வெற்றியானது இப் பாடசாலையின் வரலாற்றில் மிகப் பெரிய சாதனையாக கருதப்படுகிறது என்று இப் பாடசாலையின் அதிபர் திருமதி பத்மா சோமகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

சொற்பொழிவினை இ.ஜெயராஜ் நிகழ்த்தினார். கவியரங்கம் கவிஞர் முருகையன் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியரைத் தேடிக் கண்டு பிடித்துத் தருமாறு, ஆசிரியரின் உறவினர் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர்.

**மட்டக்களப்பு விபுலானந்தர்**

# இசைக் கல்லூரி சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படும்

(மட்டக்களப்பு)

இசை நடன ஆசிரியர்கள் தெரிவுக்கு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி சான்றிதழ் ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்து விவகாரம் தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தமிழ் அலுவல்கள் பிரதிப் பணிப்பாளர் ஜனாப் ஏ. யூ. நஹியா கூறினார்.

அண்மையில் மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியின் 8ஆவது ஆண்டு நிறைவு விழாவில் தலைமை வகித்து பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்,

இக் கல்லூரி மாணவிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றார்.

அமைச்சு செயலாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். (37)

# பயிலுனர் ஆசிரியர்களுக்கு திசைகோள் பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பயிலுனர் ஆசிரியர்களுக்கான திசைகோள் பயிற்சி நெறி வகுப்புக்கள் சென்ற சனி, ஞாயிறு தொடக்கம் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி நெறி தொடர்ந்து வரும் ஒன்பது விடுமுறைநாட்களில்நடைபெறும்,

மண்குளத்தில் யோகபுரம் கொத்தணி அதிபர் எஸ். சிவராஜாவும், பாண்டியன்குளம் கொத்தணி அதிபர் ரி. என். திருஞானமும், முல்லைத்தீவில் சரவணபவானும், விசாகலிங்கமும், புதுக்குடியிருப்பில்ஒட்டுசுட்டான் கொத்தணி அதிபர் சிவசம்பு மெய்யழகன் ஆகியோரும் இப்பயிற்சியை அளித்து வருகின்றனர்.

அடுத்த மாதம் இந்தப் பயிற்சி நெறி முடிவடையும். இப்பயிற்சி நெறி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (58

# பயிற்சிப் பட்டதாரிகளை இடமாற்ற வேண்டாம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் தற்போது கடமையாற்றும் பயிற்சி பட்டதாரி ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டாமென வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன், வடமாநிலக் கல்விப் பணிப்பாளருக்கு ஊடாகவடக்கு–கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சற்குணராஜாவிடம் கோரியுள்ளார்.

வடமராட்சிகிழக்கில் உள்ள பாடசாலைகளில் நீண்டகாலமாக நிலவி வந்த ஆசிரியப் பற்றாக்குறை ஆரம்ப ஆசிரியர்கள் நியமனம், பயிற்சி பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம், பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் ஆகியவற்றின் பின்பே ஓரளவு நீங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ள பயிற்சி பட்டதாரி ஆசிரியர்களை யாழ் மாவட்டத்திற்கு வெளியே ஆசிரியப் பற்றாக்குறை நிலவும் மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. (36

# றொக்கற் தாக்குதல்களை இரகசிய சேவை நடத்தியது

மே மாதத்தின் இறுதிப் பகுதியில் தென்கிழக்கு ஆப்கான் பகுதியில்அமைதிநிலவவில்லை

கிளர்ச்சிக்காரர்கள் இங்கு நடாத்திய தாக்குதல்களே இவற்றிற்குக் காரணமென காபூல் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மார்ச் 15ஆம் திகதிக்கும் மே 15ஆம்திகதிக்கும்இடையே 200 கிளர்ச்சிக் காரர்கள் கொல்லப் பட்டனர்.

றொக்கற் தாக்குதல்களையும் கெரில்லாக்கள் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர். ஏப்பிரல் மாதத்திலும், மே மாதத்திலும் முறையே 127, 120 றொக்கற் தாக்குதல்கள் இடம் பெற்றன.

உணவுப் பொருட்களைக் கொண்டுவரும் ஏரோப்ளொட் விமானங்களின் மீதும் தாக்குதல்களை நடாத்தும்படி பாகிஸ்தான் இரகசியசேவைகெரில்லாக்களுக்கு உத்தரவிட்டது என காபூல்உள்விவகார அமைச்சு அறிக்கை ஒன்று கூறியுள்ளது.

## கலாசாரப் போட்டி

சல்குடா தொகுதி ரீதியான கலைகலாசாரப் போட்டி வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில்நடை பெற்றது. மாவட்ட உதவிஇளைஞர் சேவைஅலுவலர்திரு. இராமச்சந்திரன், திருமதி.ரே இராமச்சந்திரன் கலந்து கொண்டனர்.

இப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு இரண்டு கழகங்கள் மட்டும் கலந்து கொண்டன, சித்தாண்டி இளைஞர் கழகம் மாவட்ட ரீதியான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவுகிழக்கு சனசமூகநிலையம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத் தீர்மானத்தின்படி அமரர் திரு. ப இரகுபதியின் நினைவாக நூல் நிலையம் ஒன்றினை அமைக்க ஏற்பாடுகள் நடை பெறுகின்றன.

நெடுந்தீவு பொது மக்களால் வழங்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் இங்கு வாசகர்கள் பயன்பெற வைக்கப்படவுள்ளன.

புத்தகங்களை வழங்க பொது நிறுவனங்களும், மக்களும் முன்வந்துள்ளனர். அமரர் இரகுபதி நெடுந்தீவின் பொது மக்களின் கலை கலாசார சமூக அபிவிருத்தியில் அக்கறை கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். (62)

## தமிழ்ப் பேருரை

இந்து சமய இந்து கலாசாரத் திணைக்களம் மாதமிருமுறை நடாத்தும். மற்றுமொரு தமிழ் மொழிப் பேருரை இன்று சனிக்கிழமை 9ஆம் தேதி மாலை 4. 30 மணிக்கு கொழும்பு 2 வக்ஷார் வீதியில் உள்ள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 14ஆம் மாடியிலமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

எழுத்தாளர் சொக்கன் ''ஈழத்தவர் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள்'' என்பது பற்றி பேருரையை நிகழ்த்துவார்

இந்து சமய கலாசார அமைச்சர் திரு. பி. தேவராஜ் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்,

போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. சே. குணரத்தினம் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குவார்

**இவ்[illegible]ாண்டிற்குள்**

# மத்[illegible] ஐரோப்பாவில் இருந்து 1500 அ[illegible] ஆயுதம் விலக்கம்

(சோவியத் யூனியன்)

அணுஆயுத ஒப்பந்தம் பற்றி ரஷ்யா புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. மத்திய ஐரேப்பிய நாடுகளில் இருந்து இந்த ஆண்டிற்குள் 1500 அணு ஆயுதங்களை விலக்கிக் கொள்வதாக சோவியத் யூனியன் அறிவித்துள்ளது.

35 நாடுகளின் மனித உரிமைகள் குழுக்கள் மாநாட்டில் கலந்துகொண்ட சோவியத் யூனியனின் வெளிவிவகார [illegible]மைச்சர் செவ்வாய் அன்று [illegible] தகவலை வெளியிட்டார். மேலும் வார்சோ ஒப்பந்தம் பற்றி அவர் கூறுகையில் சோவியத் தலைமையிலான வாசோஒப்பந்தக்கூட்டமைப்பு தமது அடுத்த கூட்டத்தின் போது பெருத்த மாறுதல் அடையும் என்றும் கூறிய வெளிவிகார அமைச்சர் நேட்டோ அதே போல தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். என்றும் கேட்டுக் கொண்டார்.

# ஆகஸ்ட் மாதத்திற்கு முன் ஆசிரியர் பற்றாக்குறை தீரும்

(கொழும்பு)

இடமாற்றம் கிடைத்தும் அந்தப் பாடசாலைக்கு செல்லாத ஆசிரியருக்கு சம்பளத்தை இடைநிறுத்துவதுஎன்று கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தீர்மானித்துள்ளார்.

சில ஆசிரியர்கள் இடமாற்றம் கிடைத்தும் அந்தப் பாடசாலைக்கு செல்லாது இடமாற்றத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் நாட்டில் உள்ள எல்லா பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவும் அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இதற்கான மதிப்பீடு ஒன்று் கல்வியமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# வார்சோ அமைப்புமுறையில் மாற்றம் ஏற்படவேண்டும்

(லண்டன்)

வார்சோ அமைப்பு நாடுகளின் கொள்கைகள் மறுசீரமைக்கப்பட்டு மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று வார்சோ நாடுகளின் தலைவர்கள் கோரியுள்ளனர்.

வார்சோ அமைப்பு ஜனநாயக முறைகளுக்கு அமைய இயங்கும் ஸ்தாபனமாக மாற்றப்பட வேண்டும் என்றும் இத்தலைவர்கள் கேட்டுள்ளனர்.

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் காரணமாக ஐரோப்பாவில் பிளவு ஏற்படுவதை தவிர்க்க முடிந்தது என்றும் அவர்கள் அறிக்கை மூலம் கூறியுள்ளனர்.

## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE (MALE)

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சி நெறி
**10. 06. 1990** இல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகளுக்கு:

**Dr. V. P. சுந்தரராஜன்**

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



மில்க்வைற் MWS MILKWHITE

**வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல்**

ரூபா 20/- க்கு மில்க்வைற் உற்பத்திகளை
வாங்குவோருக்கு
கீரைவிதை, அழகிய அம்பாள் ஸ்ரிக்கர் அன்பளிப்பு,
மற்றும் மேலுறைகளுக்கு உரிய பரிசுகள்.

**- மில்க்வைற்,** யாழ்ப்பாணம்.

(B/1017)


## யாழ்ப்பாணக் குடா நாட்டு

## உவர்நீர் தடுப்பு

யாழ்ப்பாணக் குடா நாட்டில் பல இடங்களிலும் கிணறுகளில் உவர்நீர் கூடிக்கொண்டே வருகின்றது. இதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு புது அணுகுமுறையை எங்கள் அமைச்சு தயாரிக்கின்றது. இதற்கு உதவியாக இவ் விளம்பரத்தை வாசிக்கும் அன்பர்கள் நிலத்திற்கடியில் உள்ள நன்னீர், உவர்நீர்ஆகியவற்றை சுதேசமுறைப்படி (Water devine) கண்டு பிடிக்கக் கூடியவர்கள் இருந்தால் அவர்களின் பெயரையும், விலாசத்தையும் எங்கள் அமைச்சில் பதிவு செய்யுமாறு கேட்டுக் சொள்கின்றோம். இவ் விடயம் தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு அறிவித்து பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுங்கள். பதிவு செய்யும் முடிவுத் திகதி 31. 07. 1990 ஆகும்.

தங்களுக்குத் தெரிந்த உவர்நீர் உள்ள கிணறுகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதையும், தக்க விலாசத்துடன் அல்லது குறிப்புக்களுடன் எங்களுக்கு 31 07.1990 இற்கு முன்பு தயவு செய்து விளம்பரத்தை வாசிக்கும் அன்பர்கள் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எந்திரி செ. பரமானந்தன்
பதில் செயலாளர்

நீர்ப்பாசன வீடமைப்பு அமைச்சு,
உள்துறைமுக வீதி,
திருக்கோணமலை.

(B - 1105)


உங்கள் வீட்டுத் தளபாட வகைகளை ஓடர்களுக்கு
மிக நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும்...

எல்லா வகையான மரங்களும் உடனுக்குடன்
அரிவு வேலைகள் செய்யவும்,

மரங்கள் யாவும் விற்பனையும்,
கொள்முதலும் செய்கிறோம்.


விபரங்களுக்கு:

## பிரமீளா மர அரிவு ஆலை

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

(B-977)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. வெள்ளையப்பு பொன்னுத்துரை**

மலர்வு: 26. 6. 1939

உதிர்வு: 9. 6. 1989

அன்பின் சிகரமாய்
அறிவின் சுடராய்
பாசத்தின் ஒளி விளக்காய்
பண்பின் உறைவிடமாய்
சொல்லில் இனியவனாய்
செயலில் வல்லவனாய்
வாழ்ந்தாயே எம் ஐயா!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாத்துயர் நீங்கிடுமோ
மாறாத்துயர் தந்துவிட்டு
மீளாத்துயில் கொண்டனையோ


## விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்

## விவசாய இரசாயனங்கள்

# விவசாய இரசாயனங்கள்

தற்போது வடபகுதியெங்கும் அறிமுகப்படு[illegible]பட்டுள்ளன.
வெங்காய பயி[illegible] தாக்கும் நுனி கருகல், தண்டு வெ[illegible]றல் ஊதா கொப்புளநோய், தண்டு [illegible]ழுகல் போன்ற நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்த

## பொலிராம் M பாவியுங்கள்.




தற்பொழுது
வெங்காய செய்கையாளர்களால்
விரும்பிப் பாவிக்கப்படும் ஓர் பூச்சிநாசினி

## பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க
பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

FINCHEM
AGRO DIVISION

**BASF** உற்பத்திகளை "பின்கெம்" (FINCHEM) வழங்குகின்றது. சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரவேட்) லிமிட்டெட்.

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவியுங்கள்.)

B-1019


மாறாத்துயர் தந்துவிட்டு
மீளாத்துயில் கொண்டனையோ
பல்லாண்டு சென்றாலும்
எம் துயர் நீங்கிடுமோ

உமது ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை
பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்,
மாமன், மருமக்கள், பேத்தி
உற்றார், உறவினர்
நண்பர்கள்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(R/342)

## துயர நினைவில்...



ப. ரகுபதி (இலங்கை நிர்வாக சேவை)

மடியில்: 2. 10. 1961
மண்ணில்: 29. 04. 1990

குமுதினிப் படகின்
கோரக் கொலைகளில்
தங்கையை இழந்தாய் தவித்தாய்
அவலமே காலம் அதைவெறிகொண்டு
மீறிடும் முயர்ச்சியில் உயர்ந்தாய்
கவனமும் தெளிவும்
காதலும் மிகுந்த
காற்றென எழுந்த உன்வாழ்வு
மாவலிச் சுழிப்பில்
மாற்றான் நிலத்தில்
முடிந்ததில் உடைந்ததெம் இதயம்.

நண்பர்கள்
ஜீவா, அருள், பரம்
ரவி, சேரன்

(R-344)

சிந்தனைக்கு

குற்றங்கள், - ஒன்றிலிருந்து
மற்றொன்று முளைக்கின்றன.

- எட்மண்ட்பர்க்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 09-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## வவுனியா மோதல்!

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் நேற்றுமுன்தினம் வவுனியாவில் ஏற்பட்ட மோதல் ''தற்செயலாக ஏற்பட்டது'' என்று இராணுவத் தளபதி கூறியிருப்பதை அப்படியே நம்பி சிறிலங்கா அரசும் ஜனாதிபதி பிரேமதாசாவும் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது.

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா படைத்தளபதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் போர்நிறுத்தத்தைப் பேணுவதில் சில ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதற்கு இணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இதன்படி வடக்கு கிழக்கிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து இராணுவம் வெளியேறுவதானால் விடுதலைப்புலிகளின் முன்அனுமதி பெறவேண்டும்.

வவுனியாவில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவுக்குச் செல்லவேண்டுமென்று திடீரென்று கடந்த புதன்கிழமை விடுதலைப்புலிகளுக்கு அறிவித்திருக்கின்றனர்.

உடனடியாக வெளியேறி வரவேண்டாமென்றும் மேலிடத்துக்கு அறிவித்து அனுமதிபெற்றுத் தருவதாக விடுதலைப் புலிகளின் வவுனியாப் பகுதி அரசியல் பொறுப்பாளர் இராணுவ அதிகாரிக்கு தெரிவித்திருக்கிறார்.

புலிகளின் அனுமதி கிடைக்கு முன்னர் நேற்று முன்தினம் காலை வவுனியா இராணுவமுகாமைச் சேர்ந்த சுமார் நூறு சிறிலங்கா சிங்கள இராணுவத்தினர் கவச வாகனங்கள் மற்றும் படைக்கலங்களுடன் முகாமிலிருந்து புறப்பட்டு விடுதலைப் புலிகளின் காவல்அரண்களை மோதிக்கொண்டு சென்றிருக்கின்றனர்.

இராணுவத்தினரை முன்னேறிச் செல்ல வேண்டாம் என்று விடுதலைப்புலிகள் விடுத்த எச்சரிக்கையை மீறி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர்மீது புலிகள் சுட்டனர். இராணுவத்தினரும் சுட்டனர். இதில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் மாண்டார்; மற்றும் பத்துப்பேர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரியான மேஜர் குலத்துங்கா என்பவர் தலையிட்டு விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்தி நிலைமை மோசமாகாமல் தடுத்து சிறிலங்கா இராணுவத்தை மீண்டும் முகாமுக்குள் திரும்பச் செய்திருக்கிறார்.

வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களிலுள்ள இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறவேண்டுமானால் விடுதலைப் புலிகளின் முன்அனுமதி பெறவேண்டுமென்று சிறிலங்கா படைத்தளபதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்

# வாஷிங்டன் உடன்படிக்கை உலகத்திற்கு சுதந்திரம் வழங்கும் செயலா?



வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்கத் தலைவர்ஜோர்ஜ்புஷ்ஷுக்கும் சோவியத் ரஷ்ய ஜனாதிபதி மிக்காயில் கொர்பசேவுக்கும் இடையில் புதிய உடன்படிக்கைகள் பல கைச்சாத்திடப்பட்டதூடன் அமெரிக்க, ரஷ்ய பிரசார சக்திகள் எதிர்காலத்தில் உலகத்திற்கே சுதந்திரம் வழங்கப்பட்டுவிட்டது போல எதை எதையோ வெல்லாம் சொல்லி பிரசாரம் செய்து வருகின்றன. ஆகவே இத்தகைய பிரசாரம் எவ்வளவுக்கு உண்மையானவை என்பது சிந்தனைக்குரிய விடயமாகும்.

பாரம்பரிய ஆயுதங்களைக் குறைப்பதிலும் இரசாயனஆயுதங்களில் முக்கால்வாசிக்கு மேல் இல்லாதொழிப்பதிலும் இணங்கி ஒப்பந்தம் செய்துகொண்ட இரு வல்லரசுகளும் கிழக்கு ஜேர்மனியையும், மேற்கு ஜேர்மனியையும் ஒரே ஜேர்மனியாக்குமிடத்து அந்த இணைந்த ஜேர்மனி எந்த அணியுடன் சேர்வது என்பதில் தீர்வு காணமுடியாது போய் உள்ளது. இதற்கான காரணம் என்ன என்று கேட்டால் ஐரோப்பியக் கண்டத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் ரஷ்யாவின் அரசியல் இராணுவ ரீதியான காவல் அரண்களாக உள்ளது. அதேபோல மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவுக்கு ஆதரவானவையாக இருப்பதுடன் சோவியத் ஊடுருவல்களுக்குக் காவல் அரண்களாக உள்ளன. இந்தநிலையில் இருபெரும் வல்லரசு களுமே ஏக ஜேர்மனியை தமது பக்கம் இழுத்துக்கொள்ளவே விரும்பும் என்பதில் ஐயமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். உண்மையிலேயே இரு வல்லரசுகளும் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு சமர்தானத்

ஜேர்மனி, ஜேர்மனியை விட்டுக்கொடுத்தால் எதிர்காலத்தில் எதிர் வல்லரசு என்ன தந்திரோபாயங்களில் இறங்குமோ என்ற பயம் இரண்டு வல்லரசுக்குமே இருப்பதையே இந்தப் போட்டி நிலைமை எடுத்துக் காட்டுகின்றது.

ஆக இதை வைத்துக் கொண்டு பார்க்கும்போது வெற்றிகரமாகக் கைச்சாத்திடப்பட்ட ஆயுத உடன்படிக்கைகள் மீதும் ஓர் சஞ்சல மனமேஎவருக்கும் உருவாகும். இதில் வியப்பொன்றுமில்லை. பாரம்பரிய ஆயுதங்களைக் குறைப்பது இரசாயன ஆயுத உற்பத்தியை ஒழித்துவிடுவது என்பதெல்லாவற்றையும் தற்போதைய போர்த்தந்திர முறைகளுடன் ஒப்பிடும்போது இவை சுக்கல் பட்டாசுகளைத் தூக்கி எறிந்துவிடும் செயலுக்கு ஒப்பிட வேண்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எக்கணத்திலும் எதிர்த் தாக்குதல்களைச் சமாளிக்கவென தயார் நிலையிலுள்ள மிதக்கும் கடற்படைத் தளங்களான விமானந்தாங்கி யுத்தக் கப்பல்களும், ஒருமுறை நிலத்திலிருந்து எழுந்தால் உலகை மூன்றுமுறை சுற்றும் வரைக்கும் தரையிறங்கவே தேவையில்லாத குண்டுவீச்சு விமானங்களும் அண்டவெளியிலிருந்து உளவு பார்த்து குறிப்பிட்ட இலக்கை அழிக்கும் திறன்கொண்ட விண்வெளி நாசதாரிகளும் கொண்ட தற்போதைய வல்லரசுகளுக்கு இந்தப் பாரம்பரிய நீண்டதூர அணு ஆயுதங்கள் தேவையற்றதொன்றே. அவற்றை வைத்துப் பராமரிப்பதால் வெறும் பராமரிப்புச் செலவே ஏற்படும். தற்போதுள்ள இராணுவ, உபகரண படைபலத்தினை எடுத்துக் கொள்ளுமிடத்து இவ்விரு வல்லரசுகளிடமும் உள்ள ஒரு கடற்படைப்பிரிவை எடுத்து நோக்கினால் ஒரு முழு நிறைவான இராணுவ பலத்தினை உடைய ஒரு நாடு நடுக்கடலில் மிதந்து திரிவது போன்றதாகும். அதுமட்டுமல்லாமல் தற்போதைய போர்க்களங்களில் புதியமுறை போர்த்தந்திரங்கள் கையாளப் படுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். 1986 ஆம் ஆண்டு அமெரிக்கா லிபியாமீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தியது. இந்த தாக்குதல்களுக்குப் பிரிட்டனில் உள்ள அமெரிக்க கடற்படைத்தளம் ஒன்றிலிருந்து F3. ரகவிமானங்கள் அத்திலாந்திக் சமுத்திரம் வழியாக பறந்துஜிப்ரோல்ட்ரர்நீரிணை வழியாக எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள மத்தியதரைக்கடலை அடைந்து லிபியாவின் தலைநகரங்களான திரிப்போலி, பெங்காசி ஆகிய இரண்டையும் தாக்கின. இங்கு இன்னுமோர் விடயம் கவனிக்கவேண்டியுள்ளது. இப்போர் விமானங்கள் மத்திய தரைக் கடலை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் போதே எரிபொருள் அரைவழியில் வைத்து வேறு விமானங்கள் மூலம் இப்போர் விமானஎரிபொருள்தாங்கிகள் நிரப்பப்பட்டன. அதாவது விமானம் நிலத்திற்கோஅன்றி ஓர் விமானத் தாங்கிக்கப்பலு

### லோகன்

க்கோ இறங்காதுஆகாயத்தில் வைத்தேஎரிபொருள் நிரப்பிக் கொள்ளப்பட்டது. இது வல்லரசுகளின் போர் வலிமையையும் ஓரிடத்தில் நிலையான தளம் ஒன்று அமைத்துத்தான் போர் புரிய வேண்டும் என்ற நிலை தேவையற்றதாகி விட்டதையே எடுத்துக்காட்டுகின்றது.

விண்வெளியை ஆயுதமயம் ஆக்கும் திட்டமும் தற்போது பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். விண்ணிலிருந்து நிலத்திற்கும் நிலத்திலிருந்து விண்ணுக்கும் லேசர் கதிர் இயக்கமூலம் இலக்குகளைத் தாக்கும் புதியமுறை ஆயுதங்கள் இருவல்லரசுகளாலும் தயாரிக்கப்பட்டுவருவதுகுறிப்பிடத் தக்கதாகும்.

ஆயிரம் கிலோமீற்றர் உயரத்திலுள்ள ஒரு நிலத்தை நோக்கித்தாக்கும் வலுக்கொண்ட செய்மதி ஒன்றை நிலத்திலிருந்து எழுந்து செல்லும் F15 ரக விசேடவிமானம் அழிக்கும் முயற்சி 1984 ஆம் ஆண்டுஇரண்டுமுறை அமெரிக்காவால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டு இந்த ஆயுத உற்பத்தி முப்பத்தாறிற்குக் குறையாது இருந்தது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல அண்ட வெளியில் மிதந்து கொண்டிருக்கும் எண்பது தொன்னுக்கும் மேற்பட்ட நிறைகொண்ட பலவகை ஏவுகணைகளையும் கொண்டசெய்மதிகளும்இவை நிலத்திலிருந்து எழுந்து தமது நாட்டைத்தாக்கவரும் எந்த அணுவாயுத ஏவுகணைகளையும் நடுவழியில்வைத்து நாசம் செய்துவிடும் சக்திகொண்டன இவையனைத்தும்அணுவாயுத ஏவுகணைக்குப் பதிலாக அல்லது அவற்றின் ஒரு பகுதிகளாக கதிரியக்க முறையில் தொழிற்படும் உலகை ஆயுத அழிவுக்குப் பயன்படுத்தும்கருவிகளே என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தகைய நவீன ஆயுதங்கள் இருக்கும் பொழுது இருபெரும் வல்லரசுகளுக்கும் பாரம்பரியமாக வைத்திருக்கும் ஆயுதங்களும், இரசாயன ஆயுதங்களும் வீண் செலவை ஏற்படுத்தும் ஒன்றாகவே இருக்கும். ஆகவே இவற்றை அழித்துவிடுவது வல்லரசுகளுக்கு லாபத்தையே உண்டு பண்ணும் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இந்நிலையில் கிழக்கு, மேற்கு ஐரோப்பிய பகுதிகளில் இருக்கும் பல இராணுவ முகாம்களில் ஒரு சில முகாம்களும் நிரந்தர நெடுந்தூர வீச்சு ஏவுகணைகளும்தேவையற்றன. இவற்றை வைத்து பாதுகாப்பதில் எதுவித பயனும் இல்லை என்பதால் இவை அகற்றபடுகின்றன என்று குறிப்பிடுவதே உன்மைக்காரணமாக அமையலாம்.

இதற்காக இருபெரும் தலைவர்களும் சேர்ந்து வோஷிங்டனில் கூடி உலகத்தின் கண்களை மயக்கி தத்தமது நிர்வாகங்களுக்கு கடந்த காலங்களில் இருந்து வந்த கெட்ட பெயர்களை மறைக்கவென இவ்வொப்பந்தத்தை செய்து கொண்டன என்பதுவே உண்மையாகும்.

ரஷ்யத் தலைவர் கொர்பச்சேவ் அவர்களுக்கு புதிய சீர்திருத்த கொளகையும், பால்டிக் குடியரசுகளின் சுதந்திர பிரகடனமும்அண்மைக் காலத்தில் பெரும் தொல்லை கொடுத்து வந்திருந்ததுடன் மேலைநாடுகளில் மொஸ்கோ இன்னமும் ஆயுதங்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கின்றது என்ற கருத்தை பரவச்செய்திருந்தது. இந்தக் கருத்தை திசைதிருப்பிவிடும் முகமாக அவர் இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டார். எனவும்இதேபோலஅமெரிக்க தலைவர் ஜோர்ஜ்புஷ் அவர்களும் கடந்தகாலங்களில் அமெரிக்கா கீழைத்தேய



சுரண்டப்படும் நாடுகள் மத்தியில் அமெரிக்கா மீது இருந்த நல்லபிப்பிராயம் அழிந்து போவதை உணர்ந்தது. அமெரிக்காஎந்தநேரமும்சண்டைக்கு தயாரான ஒருநாடு. இத்துடன் சமரசம் செய்யுமிடத்து எமது நாட்டிற்கே பெரும் கேடுவிளையும் என எண்ணிய பல நாடுகள் அமெரிக்காவுடன் தமது சகவாசத்தைக் குறைத்துக் கொண்டன. அதேபோல் அபிவிருத்தி அடைந்துவரும்நாட்டு மக்கள் மத்தியில் அண்மைக் காலமாக எழுந்துவரும் அமெரிக்க எதிர்ப்பு அலையை போக்கும் நோக்குடன் அல்லது அந்த அலையை தணிக்கும் நோக்குடனேயே இந்த உடன்படிக்கைகள் பல புதிதாகச் செய்து கொள்ளப்பட்டன என நோக்கலாம்.

இதே போல அண்மையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மத்தியில் எழுந்த ஜனநாயக மோக எழுச்சியும் இந்நாடுகள் மத்தியில் அமெரிக்கா தனது பெயரை வலுவடையச் செய்வதும் இவ்வுடன்படிக்கையின் குறிக்கோளாக இருக்கலாம்.

ஆகவே இரு வல்லரசுகளின் நோக்கமும் சமாதானமல்ல தமது பாதிக்கப்பட்ட நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதும், தாம் உலகின் கண்களுக்கு சமாதான விரும்பிகளாக அமைய வேண்டும் என்டும்என்பதுமே.

இதனால் உலகின் பலவீனமான நாடுகளிடம் இருந்து சுரண்டும் கொள்கையும் இச்சுரண்டல்களுக்காக உள்நாட்டுக் குழப்பங்களை தூண்டிவிடும் செயற்பாடுகளும், தமக்கு கீழைத்தேய நாடுகளிடம் பெரும் ஆயுத சந்தை வசதிகளை ஆக்கிக்கொள்ளும் திட்டங்களும் என்றும்தணியப் போவதில்லை என்பதையே இது காட்டி நிற்கின்றது.

வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களிலுள்ள இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறவேண்டுமானால் விடுதலைப் புலிகளின் முன்அனுமதி பெறவேண்டுமென்று சிறிலங்கா படைத்தளபதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் உடன்பாடு காணப்பட்டிருக்கிறது.

இப்பகுதிகளிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இன்றுள்ள நிலையில் திடீரென்று அவசர அவசரமாக வெளியேறிச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

மேலும் நேற்றுமுன்தினம் இலங்கையிலுள்ள பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் முக்கியமான புனித நாளாகும். இலங்கைக்கு பௌத்தம் வந்த பொசன் தினத்தை பௌத்தர்கள் கொண்டாடும் நாள். வவுனியாவிலிருந்து சுமார் ஐம்பது மைல் தூரத்தில் மிகுந்தலை என்ற இடத்தில் பொசன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் ஜனாதிபதி பிரேமதாசாவும் கலந்துகொண்டிருந்தார்.

வவுனியாவுக்கு மிக அருகேயுள்ள அநுராதபுர நகரத்திலும் பொசன் பண்டிகைக்கான பெருந்திரளான சிங்கள மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

வவுனியா மற்றும் சூழ்ந்த பகுதிகளிலும் வைகாசி விசாகப் பண்டிகையையொட்டி இந்துக்கள் பெருமளவில் ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வவுனியா முகாமிலிருந்து நூறுபேர் வரையிலான சிறிலங்கா சிங்கள இராணுவம் திடீரென கவச வாகனங்களுடன் வெளியே வந்து விடுதலைப் புலிகளின் காவல் அரண்களையும் மோதிக்கொண்டு முன்னேறிச் செல்ல எத்தனித்தது. ''தற்செயலாக நடந்தசம்பவம்'' என்று சொல்லமுடியாது.

காவல் அரண் அமைத்து நிற்கும் விடுதலைப்புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டையும் படைக்கலங்களுடன் வரும் சிறிலங்கா சிங்கள இராணுவம் முன்னேறிச் செல்வதைக் கையைக்கட்டிப் பார்த்துக்கொண்டு நிற்பார்கள் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

எனவே விடுதலைப்புலிகளுடன் மோதிப்பிரச்சினையை உருவாக்கி அநுராதபுரம் மிகுந்தலையில் குழப்பத்தை ஏற்படுத்தி நாட்டில் மீண்டும் ஒரு இனக்கலகத்துக்குத் தூபம் இடவே சிறிலங்கா சிங்கள இராணுவம் தாண்டிக்குளம் முகாமிலிருந்து அத்துமீறி வெளியே வந்ததென்று கருதலாம்.

இன்று நாட்டில் நிலவும் அமைதியைக் கெடுத்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளைக் குழப்பி மீண்டும் ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்துவதற்கு சில சக்திகள் பின்னணியில் செயல்பட்டு வருகின்றன. ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக இந்த சக்திகள் தீவிரமாகச் செயல்பட முனைகின்றன. உள்நாட்டுச் சக்திகளுடன் வெளிநாட்டுச் சக்திகளுக்கும் தொடர்பிருக்குமென்று எண்ணுவதற்குமிடமுண்டு.

பிரேமதாசாவும் அரசாங்கமும் விழிப்புடனிருப்பது அவசியம்.

மில்லை. இதிலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ள லாம். உண்மையிலேயே இரு வல்லரசுகளும் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டு சமாதானத் திற்கு வருமானால் எதற்காக

ஆம் ஆண்டு அமெரிக்கா லிபி யாமீது குண்டு வீச்சுத் தாக்கு தல்களை நடாத்தியது. இந்த தாக்குதல்களுக்குப் பிரிட்ட னில் உள்ள அமெரிக்க கடற்

இதேபோல அண்ட வெளி யில் மிதந்து கொண்டிருக்கும் எண்பது தொன்னுக்கும் மேற் பட்ட நிறைகொண்ட பல வகை ஏவுகணைகளையும்

ஒன்றைச் செய்துகொண்டார். எனவ ம்இதேபோலஅமெரிக்க தலைவர் ஜோர்ஜ்புஷ் அவர் களும் நடந்தகாலங்களில் அமெரிக்க கீழைத்தேய

வசதிகளை ஆக்கிக்கொள்ளும் திட்டங்களும் என்றும்தணியப் போவதில்லை என்பதை இது காட்டி நிற்கின்றது.

# என்ன நீதி, என்ன நியாயம்?

ஆசிரியர்.
ஈழநாதம்.

30.04.1989 ஆந் திகதி பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபைத்தேர்தல் கிளிநொச்சி மாவட்டகூட்டுறவுஅபிவிருத்திஉதவிஆணையாளர்தலைமையில் நடைபெற்றபோதுஎனதுபெயரும்பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.அப்போது சிலர் நான் சங்க வங்கியில் கடன் பெற்று கட்டாதிருப்பதாக ஆட்சேபித்தனர்.பெரும்பான்மை அங்கத்தவர்கள் நான் இருப்பதற்கு தகுதியுடையவர்.ஓர் தவணை தப்பிய கடனாளி இல்லை என்று வாதிட்டனர்.

கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் இரகசிய வாக்கெடுப்பிற்கு விட்ட போது மூன்றில் இரண்டு பங்கிற்கு மேற்பட்ட அதிக வாக்குகள் கிடைத்து இயக்குனர் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதோடு. சங்கத்தின் துணைத் தலைவராக ஏகமனதாகதெரிவுசெய்யப்பட்டேன்.

பின் சங்க வங்கியில் முன் பெற்ற முழுக்கடனும் வட்டியும் செலுத்தி ஈடாகக் கொடுத்த காணி உறுதியும் பெற்றுக்கொண்டேன்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நான் தெரிவுசெய்யப்பட்ட போது கடனாளியாக இருந்துள்ளேன். எனவே 30.05.90 இல் இருந்து இயக்குனர்சபை உறுப்பினர் பதவியினின்றும், துணைத் தலைவர் பதவியினின்றும் என்னை நீக்கியுள்ளதாக கடிதம் அனுப்பியுள்ளார்.

பெரும்பான்மை அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்பட்ட நான் மேலும் இரண்டு ஆண்டுகள் அப்பதவியில் இருந்து சேவை செய்யும் பணியை இழந்ததுடன், அகௌரவப்படுதப் பட்டுள்ளேன்.பொதுச் சேவையில்ஆர்வம் கொண்டு சிலபொதுஸ்தாபனங்களில் கௌரவப்பதவி வகித்து உழைக்கின்ற பணிக்கு மாபெரும் களங்கமாகவுள்ளது.இது என்ன நீதி இது என்ன நியாயம்.

பூநகரி:
தம்பிராய்

-பொ.தங்கராசா

## மக்கள் மடல்

# சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு உதவித் தொகை வழங்கல்

ஆசிரியர்
ஈழநாதம்

வடமராட்சிப் பகுதியில் மீளக்குடியமர்த்தல் தொடர்பான 2000 ரூபாய் இரு கட்டங்களில் வழங்கப்பட்டது. இதில் பலர்வெவ்வேறுகிராம சேவகர் பிரிவுகளிலும். பதிவு செய்து கூடியளவு நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டது யாவரும் அறிந்தஉண்மை அத்துடன் இவர்களுக்கே சுயதொழில் ஊக்குவிப்பு உதவித்தொகையான ரூ. 4000/-வும் கட்டடப் புனரமைப்பு சன்மானத் தொகையாக ரூ. 15000 வும் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஒக்ரோபர் மாதத்தில் வழங்கப்பட்டது.

இப்பகுதியில் பலருக்கு உண்மையில் பாதிப்புற்று இருந்தும்இந்த நிவாரணங்கள் வழங்கப்படாமலிருப்பதுமிக்க விசனத்திற்குரிய விடயமாகும். வடமராட்சி தவிர்ந்த மற்றைய இடங்களில் இக்கொடுப்பனவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விடயம்.

சுமார் 9 மாதகாலமாகியும் மேற்படி உதவி தொகைகள் வழங்கப்படாததால் இவற்றைப் பெற தகுதியானோர் புலோலி வங்கி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் இதுவரை அவற்றை வழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இங்கு எடுத்துக்காட்டுவது சாலச்சிறந்தது.

ஆகவே மேற்படி கொடுப்பனவுகளை மேலும் காலந் தாழ்த்தாது வழங்க உரியவர்கள் உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னைப் போன்றோரின்வேண்டுகோள்.

இவ்வண்ணம்,
தங்கள் உண்மையுள்ள,
ஈழமகள்
(திருமதி பூ. தங்கராஜ்)
பொலிகண்டி.
7.6.90

# வை[illegible]ல் கொள்வனவில் வீழ்ச்சி

(மட்டக்களப்பு)

பெரும் போகவேளாண்மை அறுவடையில்வாழைச்சேனை காகிதஆலையின் வைக்கோல் கொள்வனவு 40சத வீதம் வீழ்ச்சிஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களிலுள்ள 10 கொள்வனவு நிலையங்கள் மூலம் 7000 மெற்றிக்தொன் கொள்வனவு செய்யலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 4146 மெற்றிக் தொன் கொள்வனவு செய்யப்பட்டுள்தாக ஆலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த வருட பெரும்போக வேளாண்மை அறுவடையில் 6699 மெற்றிக்தொன் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

மெற்றிக்தொன் 200ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஜனவரி- மே வரையில் இக் கொள்வனவு இடம்பெற்றன.

# தற்காலிக ஊழியர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை

(வட்டக்கச்சி)

பருத்தித்துறை இலங்கைப் போக்குவரத்து பஸ் டிப்போவில் கடந்த ஒன்றரை வருடமாகக் கடமையாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை.

மேலும் தற்காலிகமாகக் கடமை புரியும் மேற்படி ஊழியர்களில் சிலர் வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு இம்மாதம் முதல் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த கால கலவரங்களின்போது மக்களின் நலனுக்காக பெரும் சேவை செய்தவர்கள் இவர்களின்இத் திடீர் தொழில் மாற்றத்தினால் ஊழியர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது. இது விடயமாக வடமராட்சி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளது. (58)

# இல்ல விளையாட்டு

(நெடுங்கேணி)

நெடுங்கேணி ஒலுமடு அரசினர் பாடசாலையில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் செங்கதிர் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

பாடசாலை அதிபர் திரு. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன் சிறப்புவிருந்தினர்களாக கொத்தணி அதிபர் திருமதி தெ. முத்துக்குமாரசுவாமி வவுனியா மாவட்ட உடற்கல்வி அதிகாரி திரு. அல்பிரட் பொன்கலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (30)

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

**பணிப்பாளர்நியமனம்**

மன்னார் மாவட்ட பிரதேசக் கல்விப் பணிப்பாளராக, பிரதம கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய ஜனாப் Z.A.ரகீம் அவர்கள் நியமனம் பெற்றுள்ளார். வடபகுதிக்கு மாற்றலாகிய பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களின் இடத்துக்கு இவர் நியமனம் பெறுகிறார். (60)




## முஸ்லிம் மக்களுக்கு திருப்தியாக அதிகாரப் பரவலாக்கல் இருக்கும்

-ஹமீத்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணங்களில் அதிகார பரவலாக்கம் சகலமுஸ்லிம்களுக்கும் திருப்தியளிக்கும் வகையில் தான்மேற்கொள்ளப்படும்.

இத்தகவலை அண்மையில் மட்டக்களப்பிற்கு வருகை தந்த வட-கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவரான அமைச்சர் ஜனாப் ஏ. சி.எஸ். ஹமீத் மாவட்ட முஸ்லிம் சமூக சமய பிரமுகர்களுடன் நடாத்திய சந்திப்பில் தெரிவித்தார்.

விமான நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் சட்டத்தரணி ஜனாப் ஏ. எல். ஜவாத் தலைமையில் முஸ்லிம் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம்களுக்கிடையிலான உறவு பலப்படுத்தப்படுவதற்காக மாதாந்தம் முக்கிய பிரமுகர்களுடன் கருத்துப் பரிமாறல் செய்ய ஏற்பாடு செய்து தரப்படல்வேண்டும்.

முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து விலகிநிற்கக்கூடிய சூழ்நிலை இன்றி நெருக்கமான சூழ்நிலை உருவாக வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தை மட்டும் கருத்தில் கொண்டு கிழக்கு முஸ்லிம்களின் நலன்களை தீர்மானிக்கக் கூடாது இவைபோன்ற கருத்துக்களை இக்குழுவினர் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

அமைச்சர் இதற்குப் பதில் அளிக்கையில்:

இனவாதக் கருத்துக்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து முஸ்லிம்களை அந்நியப்படுத்த முயல்வது முஸ்லிம்களுக்கு எவ்வித மான பயனும் தரப்போவதில்லை.

சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவது தான் முஸ்லிம்களின் கடமையாகும்.

ஸ்ரீலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெறலாம் எனச் சிலர் கருதுகிறார்கள்.

நிச்சயம் மோதல் நடைபெறக்கூடியசூழ்நிலை இல்லை என்பதை நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (37)

### கொழும்பு நகரச் சுற்றுப்புற ரயிலை மின்சார மயப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பு நகரின் சுற்றுப்புறங்களுக்கான ரயில் சேவையை மின்சார மயப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இதனைச்செய்வதற்கு சுமார் எண்ணூற்றி நாற்பது கோடி ரூபா செலவாகும் எனவும் அமைச்சர் மேலும்சொன்னார்

1980 ஆம் ஆண்டுக்குப் பின் இவ்வாண்டு ரயில் பயணிகளின் எண்ணிக்கை இருபது சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கைப் புகையிரத திணைக்களம் நூற்றி இருபத்தைந்து வருடங்களாக இயங்கிவருகின்ற போதிலும் புதிய தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்க அது பின்னிற்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொங்கிரீட் சிலிப்பர் கட்டை தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது படிப்படியாக ரயில்வேப்பகுதி இவ்வாறு முன்னேறும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

### மோட்டார் இணைப் படகுகள் மீனவருக்கு அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

ஐந்து கண்ணாடி மோட்டார் இணைப் படகுகளும் அதற்கான ''அவுட் போட்'' மோட்டார் என்ஜின்களும் புனர்வாழ்வு புனரமைச்சினால் மீனவ குடும்பங்கள் சில

குடும்பங்களுக்கு இவ் உதவி வழங்கப்பட்டன.

குறிப்பாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், வட்டுவாகல், கள்ளப்பாடு, சிலாவத்தை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வாழும் குடும்பங்

### மீன்நோய்கள் பற்றி மக்கள் பீதிகொள்ள வேண்டாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன் நோய் தொடர்பான வதந்திகள் பற்றி மக்கள் பீதி கொள்ளத் தேவையில்லை. மீன் சாப்பிடுவதால் எதுவிதமான தீங்குகளும் இல்லை என ஆராய்ச்சி அறிக்கைகள் தெளிவுபடுத்தியுள்ளன.

மாவட்ட கடற்தொழில் அலுவலகர். திருஏ.ரீ.ஜோர்ஜ் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு

அரச அதிபர் திரு ஆர். யோகநாதன் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் ''நாரா'' எனப்படும் தேசிய நீரியல் ஆய்வு நிறுவனம், கிழக்கு பல்கலைக்கழக உயிரியல் பீடம் என்பன தனித்தனியாக ஆய்வுகள் மேற்கொண்டன.

இவ் ஆய்வுகள் மூலம் சந்தேகங்கள் தெளிவு படுத்தப்பட்டன.

மக்கள் வதந்திகள் காரணமாக பீதி கொள்ள வேண்டாம்.

ஒருசில மீன்வகைகளில் உயிரினங்கள், ஒட்டுண்ணிகள் காணப்படுவது வழமையானது அவற்றை உண்பதால் எவ்வித தீங்குகளும் இல்லை என்றும் அவரது அறிக்கை கூறுகிறது. (37)

### சிற்றூர் அவை தெரிவு

(கிளிநொச்சி)

ஊரியான் சிற்றூரவை கலைக்கப்பட்டு புதிதாக ஒரு சிற்றூரவை தெரிவுசெய்யப்

**வவுனியாவில்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெங்காயம் கொண்டு சென்ற பத்துப் பதினைந்து லொறிகள் கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. இதில் மங்கை என்ற பெயருடைய

### எக்காரணம் கொண்டும் "புலிகள்" மீது சுடக் கூடாது

(டாக்கா)

அடர்த்தியான பங்களாதேஷ் சுந்தர்பான் காடுகளில் மாத்திரம் காணப்படும் றோயல் பெங்காள் ரைகேர்ஸ் (Royal Bengal Tigers) என்ற இனத்தைச் சேர்ந்த புலிகளை எக்காரணம் கொண்டும் கொல்லக் கூடாது என்று பங்களாதேஷ் வன, சுற்றாடல் அமைச்சு, வன பரிபாலன அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

புலிகள் உணவுக்காக மனிதர்களை அல்லது வளர்ப்பு மிருகங்களைக் கொன்றால் மிருகங்களை பிரஞ்ஞை இழக்கச் செய்யும் போது மட்டும் துப்பாக்கிகளைப் பாவிக்கும் படியும், புலிகளைக் வேட்டையாட வேண்டாம் என்றும் அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தில் 1974 ல் கொண்டு வந்த சட்டத் திருத்தத்தின் பிறகு புலிகளின் எண்ணிக்கை 100ல் இருந்து கடந்த 15 ஆண்டுகளில் 400 ஆக அதிகரித்துள்ளதாம்.

நர பட்சணிகளான இந்தப் புலிகள் இருந்தாற்போல் குடியிருப்புக்களைத் தாக்குவதுண்டு. வருடமொன்றிற்குச் சுமார் 12 கிராம வாசிகள் புலிகளால் கொல்லப்படுவதாக வன பரிபாலன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### வன்செயலால்இறந்தவர்களுக்கு இன்னும் ஒய்வூதியம் இல்லை

-மகாசிவம்

1983 க்குபின்னர் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆறு தமிழ் ஆசிரியர்களது விதவை மனைவிகளுக்கு இன்னும் ஒய்வூதியம் வழங்கப்படவில்லை.

இவ்வாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் நேற்று யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மேற் படி சங்க 16 வது ஆண்டு மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய திரு. மகாசிவம் இதுபற்றி கல்விய

வையில்லை. எந்த இனமானாலும் அவர்களும் ஆசிரியர்கள். அவர்களுக்கு நியமனத் திகதியிலிருந்து தராதரத்துக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

பயிலுநர் ஆசிரியர் என்று நியமனம் பெற்றாலும் அவர் பட்டதாரியானால் அவரது நியமனத்திலிருந்து பட்டதாரிச்சம்பளத்தையும் வழங்க வேண்டும்.

தமிழர்கள் கல்விச் சேவை

**பெருமாளை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாள் மற்றொரு தலாய்

அதற்கான ''அவுட் போட்'' மோட்டார் என் ஜின்களும் புனர்வாழ்வு புனரமைச்சி னால் மீனவ குடும்பங்கள் சில வற்றுக்கு வழங்கப்பட்டன.

கடந்த வன் செயல்களின் போது இறந்த, கஷ்டப்பட்ட

**கொழுவி**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சாரி ஒருவர் தெரிவித்தார்.

சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திச் சபை கள் மற்றும் ஸ்தாபனங்கள் இதற்கு ஆதரவு வழங்கி செயற்பட வேண்டும்.

இவைநடைமுறைப்படுத்தப் படுமானால் மின்சார சீர்கேடு பிரச்சினைகளைத் தீர்க்க அத்துடன் இச் சபைக்கும் உள்ளூராட்சி மின்சார விநி யோக அமைப்புக்கும் தமது தொழில் நுட்ப வேலைகளை கவனிக்க மிகவும் உதவியாக வும் இருக்கும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

**எரிபொருள்**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றோல் விற்பனை செய்கிறார். இந்நிகழ்வு சங்கத்தின் மீது தவறான அர்த்தத்தைக் கற் பிக்கிறது. சம்பந்தப்பட்டவர் கள் விரைந்து செயற்படுவார் கள் என பொதுமக்கள் எதிர் பார்க்கிறார்கள். (60)

**கொழும்பிற்கு**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தனர். சுறா, மீன்க ளைத் தவிரப் பாரை, குருளை சாளை இன மீன்களிலும் போமலின் தடவப்பட்டிருப்ப தாக அதிகாரிகள் தெரிவித்த னர்.

வெளியிடங்களிலிருந்து போமலின் போடப்பட்டு கொழும்பு நகருக்குள் மீன் களைக் கொண்டுவரும் வியா பாரிகள்மீது வழக்குத்தொடர தமக்குச் சட்ட அதிகார மில்லையென்று கொழும்பு மாநகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொக்குத்தொடுவாய், வட்டு வாகல், கள்ளப்பாடு, சிலாவ த்தை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வாழும் குடும்பங் களுக்கே பகிர்ந்து அளிக்கப் பட்டன.

கள்ளப்பாடு [illegible] நடைபெ ற்ற [illegible] வைபவத்தில் தமிழ் [illegible] விடுதலைப் புலிகள் சார் பில் முல்லைப்பட்டினப் பொ றுப்பாளர் செல்வரும், கடற் றொழில் திணைக்கள முகா மையாளரும் கிராமசேவகர் செல்வரெத்தினமும் கலந்து கொண்டனர். (58)

(கிளிநொச்சி)

ஊரியான் சிற்றூரவை கலைக்கப்பட்டு புதிதாக ஒரு சிற்றூரவை தெரிவுசெய்யப் பட்டது. மக்கள் தெரிவித்த புகாரைத்தொடர்ந்தே முன்பு இருந்த சிற்றூரவை கலைக் கப்பட்டது.

கிளிநொச்சி கிழக்குப் பிர தேசப் பொறுப்பாளர் திரு. இலக்கியன் தலைமையில் நடை பெற்றதெரிவுமுரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. (49)

# ரூபா 50 கோடி உதவி அமெரிக்கா அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை யூ. எஸ். உதவி நிறுவனம் உதவித் தொகை 50 கோடியாக அதிகரித்துள் ளது இந்தத் திருத்த உடன் படிக்கை நேற்றுக் கொழும் பில் கைச்சாத்திடப்பட்டது. தற்பொழுது மேற்கொள்ளப் பட்டுவரும் திட்டங்கள் தொ டர்பான உடன்படிக்கையில் நான்கு திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன.

1 கோடியே 11 லட்சம் அமெரிக்க டொலர் நன்கொ டையாகவும் 35 லட்சம்அமெ ரிக்க டொலரை கடனாகவும் வழங்குவதாக நேற்று கைச் சாத்திடப்பட்டது. அத்துடன் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளுக்கும், பயிற்சிகளுக் கும் மேலதிக உதவி கிடைக் கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

**பேச்சுவார்த்தையில்**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் பேசுகையில் இம்மாவட்டத்திலுள்ள இரா ணுவ முகாம்கள் விரைவில் வாபஸ் பெறப்படும் என அரசுடனான பேச்சுவார்த் தையில் உறுதியளிக்கப்பட் டுள்ளது.

எமது போராட்ட காலத் தில் ஆதரவு வழங்கிய இக் கிராம மக்களின் தேவை களை நிறைவு செய்ய நாம் ஆட்சியாளர்களாக இல்லாவி டினும் ஆட்சியாளர்களால் வழங்கப்படும் உதவிகளை துரிதப்படுத்த உதவுவோம் என்றார்.

வி. பு. ம, மு மாவட்ட அமைப்பாளர் விசுவும் பேசி னார். (37)

## பெண்கள் கருத்தரங்கு

(சாவகச்சேரி)

இன்று சாவகச்சேரியில் சர சாலை அம்பிகா பாலர் பாட சாலையில் ''அபிவிருத்தியில் பெண்களின் கடமைகளும் பொறுப்புகளும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கிற்கு சாவ கச்சேரி உதவி அரசாங்க அதி பர் சுந்தரம்பிள்ளை தலைமை தாங்குவார்.

நாவாந்துறை மகாவித்தி யாலய உபஅதிபர் வி. சிறி சக்திவேல், விரிவுரையாளர் சிறிரஞ்சனி சிவபாலன், பேரா சிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, திருமதி என். ஜெக தீசன், செல்வி. ஆ. சத்திய லோஜினி, திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்று வர்.

பதினைந்து லொறிகள் கொள்ளையர்களால் கொள் ளையடிக்கப்பட்டது. இதில் மங்கை என்ற பெயருடைய நீர்வேலியை சேர்ந்தவருடைய 28 ஸ்ரீ 8229 இலக்கமுடைய லொறியின் சாரதி துப்பாக் கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானார். இவர் உரும் பிராயைச் சேர்ந்தவர். பெயர் சைமன் மருதநாயகமாகும். வயது 44. இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. இவ் லொறியின் கிளினர் கத்திக் குத்துக் காயங்களுக்கு உள் ளாகி வவுனியா ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இவ்லொறிச்சாரதியிடமிருந்து 2000 ரூபா கொள்ளையிடப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**திருட்டு**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பல ஆயிரம் ரூபா பெறுமதி யான நகைகளை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். இதனால் திருவிழாவுக்கு வரும்பக்தர்கள் அச்சத்துடன் வருவதை காணமுடிகிறது. (43)

**அரசுக்கெதிராக...**
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிருபாகரன் தலைமை யில் நடந்த பத்திரிகை யாளர் மாநாட்டில் ஈ. பி. ஆர். எல். எவ். இதனைத் தெரிவித்தது.

**தற்காலிக**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆணைக்குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித் துள்ளார்.

உரிய மாதிரிப் படிவங்களு க்கு அமைய இந்த விண்ணப் பங்களை பதிவுத்தபால்மூலம் பிரேமசிரி வெலிவிட்ட, பிரதி கல்விப் பணிப்பாளர், அரசா ங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு, இசுறு பாயா, பெலவத்தை பத்தர முல்லை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

அனுப்பும் உறையின் இடது புற மேல் மூலையில் நிறை வேற்ற அதிபர் எனக் குறிப் பிடவேண்டும்.

**பெருமாளை**
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாள் மற்றொரு தலாய் லாமா போன்று ஒரு தலை யிடி என்று கருத்துத் தெரி வித்தார்.

**அகதிகள் தொகை குறைகிறது**

இதேசமயம் வரதராஜப் பெருமாள் வெளியேறிய சம யம் திருக்கோணமலையிலி ருந்து இந்தியக்கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டு ஒரிஸாவில் கொண்டுபோய்ச் சேர்க்கப் பட்ட தமிழ்க் குழு அகதிக ளின் தொகை ஒரிஸா முகா மில் குறைந்து வருகிறதாம் இவர்கள் கள்ளத்தனமாகத் தமிழ் நாட்டிற்குள் நுழைந் துவருவதாகக் கூறப்படுகிறது.

**எதிரிக்கும்**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி
கையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய ஜனாதி பதி; வன்செயல்களை நாடா மல் நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு சகலரும் பாடுபட வேண்டும்.

மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சிக்கு சகல ரும் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும் நாட்டு மக்க ளின் சேம நலன் கருதியே இது மேற்கொள்ளப்பட்டுவரு கிறது.

அசோகமன்னனின் கொள் கையின் அடிப்படையில் தேர் தல் கால வாக்குறுதியின்படி தான் ஆட்சிபுரிய விரும்புவ தாகவும் ஜனாதிபதி குறிப் பிட்டார்.

பேச்சுவார்த்தை, கருத் தொற்றுமை சமரசம் காணு தல் போன்றவற்றின் மூலமே பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்றார்.

**உல்லாசப்**
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வர் தெரிவித்தார்.

கடந்த ஐந்து மாதத்தில் ஒரு இலட்சத்து இருபதாயிர த்து தொளாயிரத்து எண்பது உல்லாசப் பயணிகள் இங்கு வந்துள்ளதென உல்லாசப் பயணத் தலைவர் ஹேமா பெர்னான்டோதெரிவித்தார்.

சங்க 16 வது ஆண்டு மாநாட் டில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய திரு. மகாசிவம் இதுபற்றி கல்விய மைச்சருக்கு பல தடவைகள் எடுத்துக்கூறியும் ஏப்ரல்30க்கு முன்னர் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது ஆனால் இன்றுவரை வழங்கப்படவில் லை.

இதனை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் வழங்கா விட்டால் ஜூலை 1ஆம்திகதி கல்விப் பணிப்பாளர் அலுவ லகம் முன்பு உண்ணா விரதம் நடாத்தப்படும்.

ஆசிரியர்களுக்கு இனம் தே

**முகாமைத்துவ**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேலை வழங்குவது என்ற உத்தரவாதம் எம்மால் தர முடியாது.

இலங்கை நிர்வாக சபைக்கு நடைபெற இருக்கும் போட் டிப் பரீட்சை மூலம் வடக்குக் கிழக்கு மாகாண சபையில் இருந்து 100 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

வடக்குக் கிழக்கு மாகாணத் தில் புனர்வாழ்வு புனரமை ப்பு பணிகள் கடந்த காலங் களைவிட தற்போது துரித மாக நடைபெற்று வருகிறது இதற்குக் காரணம் தற்போ தைய சூழல் சாதகமாக இருப் பதே ஆகும்.

அதிகாரப் பரவலாக்கம் முன்பு காணப்பட்ட நிலைக் கும் தற்போது காணப்படும் நிலைக்கும் எவ்வித வேறுபா டும் இல்லை.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் புதிய அரசு பொறு பேற்கும்வரை எல்லாக் கட மைகளையும் கணேசநாதனே செய்வார்.

வடக்குக்கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு புனர மைப்பு இணைப்புக்குழு கூட் டம் இன்று மட்டக்களப்பில் நடைபெறும். அடுத்த கூட் டம்வவுனியாவில்நடைபெறும்

31-3-90க்கு பின்பு நியமனம் பெற்றவர்கள் என்ற காரணத் திற்காக வேலை நீக்கம்செய் யப்பட்ட 33 ஊழியர்களும் மீண்டும் வேலைக்கு சேர்க்கப் பட்டுள்ளனர் என்றும் கணேச நாதன் தெரிவித்தார். (37)

நியமனத்திலிருந்து பட்ட தாரிச்சம்பளத்தையும் வழங்க வேண்டும்.

தமிழர்கள் கல்விச் சேவை யிலும் சரி, மக்கள் வங்கி, கல்வி நிருவாக சேவை எனப் பேதமின்றி பதவி உயர்வு வழங்குவதில் புறக்கணிக்கப் படுகின்றனர்.

இந்த நிலமை இன்றைய நிலைமை இன்றைய இனவிகி தாசார முறையால், சிறிய மாற்றம் கண்டுள்ள போதும், கடந்த காலங்களில் எம்மவ ருக்கு கொடுக்க வேண்டிய பதவி உயர்வுகள் கொடுக்கப் படாமைக்கும் சேர்த்து கொடுக்கப்படவேண்டும். இவ் வாறு அவர் கூறினார்.

தொண்டர் ஆசிரியர்கள் நீண்டகாலம் தம்மை கல்விக் காக அர்ப்பணித்ததனால் வயது எல்லையை சிலர் தாண் டிவிட்டனார் சிலர் க.பொ.த. (சா)தராதர பத்திரத்துடனே இருக்கின்றனர். இவர்களை வயது எல்லை க.பொ.த உயர்தரம் என்று தட்டாது நியமனம் வழங்க வேண்டும்.

தமிழர் பணம் கொடுத்து காணிவாங்கி, தமது செலவில் கட்டியஇரத்மலானை இந்துக் கல்லூரியில் இராணுவம் குடி கொண்டிருக்கின்றது அதனை வெளியேற்ற வேண்டும்.

தமிழ் மாணவர் தமது கல்வியை அங்கு தொடர வகை செய்ய வேண்டும்.

**விளையாட்டு**
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சென்றபோது, எனதுவீட்டில் அழுகுரல் கேட்டு ஓடிவந்த போது எனது மகளைச்சுற்றி தீ பற்றி எரிந்து கொண்டிருந் தது. மகள் அலறித் துடித்துக் கொண்டிருந்தாள் தீயை அணைத்து உடனே மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம்.

பின் அங்கிருந்துஅம்புலன்ஸ் மூலம் யாழ் பெரியாஸ்பத்தி ரிக்கு கொண்டுவரப்பட்டோம் என்றார்.

யாழ்நகர மரணவிசாரணை அதிகாரி எஸ். பிரான்சிஸ் எரிகாயங்களினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித் தார். (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பனிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆம் 9 தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.